வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 24.06.2023 சனிக்கிழமை இதழ் : 197 பக்கங்கள் : 16

## பிரபாகரனின் மரபணு அறிக்கையை வெளியிடுவதில் அரசு உள்நோக்கம்!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

"தலைவர் வே. பிரபாகரனுடைய மரபணு அறிக்கையை இலங்கை அரசாங்கம் வெளியிடுவதில் தயக்கம் காட்டுகின்ற நிலையில், அதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்கிறது" - என்று தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் வந்த அவர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஒரு தேசிய விடுதலை போராட்டத்தை தமிழ் மக்களுக்காக இந்த



மண்ணிலே முன்னெடுத்த தலைவரின் மரபணு அறிக்கையை வெளியிடுவதில் இந்த அரசாங்கம் தயக்கம்

15

## கொழும்பில் தமிழர் படுகொலை

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு - கொலன்னாவையில் தமிழர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய சுப்பிரமணியம் தயாபரன் என்பவரே கொல்லப்பட்டார்.

15

## அரசியல் கைதி தேவதாசன் பொது மன்னிப்பில் விடுதலை

கொழும்பு, ஜூன் 24

15 வருடங்களுக்கும் மேலாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கனகசபை தேவதாசன் (வயது 66) ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான தேவதாசன் 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தில் அந்த ஆண்டு நடந்த தற்கொலை தாக்குதலுக்கு விடுதலைப் புலி களுக்கு உதவினார் என்ற

15

## இலங்கைக்கு கடன் வழங்கியோர் அதனை மறுசீரமைக்க வேண்டும்!

### அமெரிக்கா வலியுறுத்து

பாரிஸ், ஜூன் 24

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் கூடிய விரைவில் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என அமெரிக்காவின் திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கை குறித்த சர்வதேச மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியை அவர் சந்தித்துள்ளார்

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவி

15

# இலங்கை பொருளாதாரம் மீட்சிபெற ஆதரவளிப்போம்

## சர்வதேச நாணய நிதியம் ஜனாதிபதிக்கு உறுதி

பாரிஸ், ஜூன் 23

**இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய உலகளாவிய நிதியுதவி ஒப்பந்தத்துக்கான உலகத் தலைவர்களின் உச்சிமாநாட்டில் உரையாற்றுவதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அந்த நாட்டின் தலைநகர் பாரிஸுக்கு சென்றார்.

இந்த நிலையில்,



ஜனாதிபதிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்ரலினா ஜோர்ஜியேவாவுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதி

15

## ஜே. வி. பி. கால மனித புதைகுழிகள் இலங்கை அரசு விசாரிக்க வேண்டும்

### ஐந்து சிவில் அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

ஜே. வி. பியுடனான மோதல்களின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடல்கள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படும் பெரும் மனித புதைகுழிகள் குறித்து இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஐந்து மனித சிவில் சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கடந்தகால குற்றங்களை கையாள்வது குறித்து இலங்கை அரசாங்கம் உண்மையான தீவிரமான ஆர்வத்தை கொண்டிருந்தால் அனைத்து மனித புதைகுழிகளையும் சர்வதேச நிபுணர்களின் மேற்பார்வையில் இலங்கை

15

## "சமுர்த்தி பயனாளிகளிடம் பணம் வசூலிப்பதை உடன் நிறுத்துங்கள்"

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சமுர்த்தி பயனாளிகளிடம் மது ஒழிப்பு, கொடி வாரம் என நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள



வேண்டாம் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

யாழ்மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற

15

## சர்ச்சைக்குரிய மயக்க மருந்து நிறுத்தப்பட்டது

கொழும்பு, ஜூன் 24

சர்ச்சைக்குரிய இந்திய மயக்க மருந்து தொகுதியின் "புபிவகைன்" (Bupivacaine) பரிசோதனைகள் நிறைவடையும் வரை அதனை பாவனையில் இருந்து நீக்கியுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவமனைகளுக்கு மாத்திரம் குறித்த மருந்துத் தொகுதியை விநியோகித்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் எஸ். டி. ஜயரத்ன தெரிவித்தார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில்

15

## 'அஸ்வெசும' நிவாரண திட்டத்தை எதற்காகவும் இடைநிறுத்த முடியாது

### பதில் நிதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை வெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்குமாறு சர்வதேச நிதி நிறுவனங்கள் வழியுறுத்தியுள்ளன. "அஸ்வெசும" நிவாரண திட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

ஆகவே, அதனை இடைநிறுத்த முடியாது. குறைபாடுகளுக்கு தீர்வு காண முடியும் என பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று

15



## பல்கலைக்கழக மாணவர்க்கு வட்டியில்லா கடன் விரைவில்

### பிரதமர் தினேஷ் பாராளுமன்றில் உறுதி

கொழும்பு, ஜூன் 23

நிதிப் பிரச்னையை முகாமைத்துவம் செய்து கொண்டு, அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்லாது தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக் கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுப்போம். அது தொடர்பில் தற்போது கலந்துரையாடி வருகிறோம் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15

# முற்படாத அரசியல்வாதிகளுக்கு யாழ். நீதிவான் கடும் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 24

**பாராளுமன்ற உறுப்பினர்கள் சாள்ஸ் நிர்மலாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணன்பவன், எம். கே. சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் வி. மணிவண்ணன், மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

சுதந்திர நாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி கடந்த 4ஆம் திகதி நடத்தப்பட்ட போராட்டத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸார் தொடர்ந்த வழக்கிலேயே யாழ். நீதிவான் இந்த எச்சரிக்கையை விடுத்தார். அத்துடன், வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு கட்டளைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மட்டுமே மன்றில் பிரசன்னமாகியிருந்தார்.

ஏனைய பிரதிவாதிகள் மன்றுக்கு சமுகமளிக்காததால் கட்டளையை வழங்க முடியாதுள்ளதாக நீதிவான் ஏ. ஆனந்தராஜா தெரிவித்தார். அத்துடன், அடுத்த தவணையில் பிரதிவாதிகள் முற்பட தவறும் பட்சத்தில் அவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்க நேரும் என்று எச்சரித்தார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணன்பவன், எம். கே. சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் வி. மணிவண்ணன், மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகள் சார்பாக சட்டத்தரணி கே. ரி. தவராசா முன்னிலையாகியிருந்தார். (ஐ)



# மலையகம் 200 ஆண்டுகள் கண்காட்சி யாழில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலை வெளிப்பாடுகளாக "புறக்கணிக்கப்பட்ட மலைகள்" என்ற தலைப்பில் கிசோகுமாரின் புகைப்பட கண்காட்சியும், "தேயிலை சாயம்", எனும் தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் புகைப்படங்களின் கண்காட்சியும் இதில் உள்ளடக்கியுள்ளது.

இந்தக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லா கடனை வழங்குங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

2021, 2022ஆம் ஆண்டு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைத்துள்ள மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை தொடர்வதற்கு தேவையான வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைத்துள்ள - விருப்பமுள்ள மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்களுக்கு சென்று வட்டியில்லா கடன் பெற்றுக்கொண்டு தங்களின் உயர் கல்வி நடவடிக்கையை தொடர நல்லாட்சி அரசாங்க காலத்தில் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஆனால் 2021,2022ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு வாய்ப்பு கிடைத்த 7ஆவது குழுவினருக்கு இந்த கடன் உதவியை பெற்றுக்கொள்ள இதுவரை வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படவில்லை. என்றாலும் இந்த வேலைத்திட்டம் செயல்படுவதாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

2017ஆம் ஆண்டு பட்டக் கல்வியை கற்பிக்கும் 6 நிறுவனங்களுக்கு 26 பட்டப் பாடநெறிகளை கற்பதற்கு வட்டியில்லா கடன் பெற்றுக்கொடுத்தோம். ஒரு கடன் தொகையின் பெறுமதி 8 இலட்சம் ரூபாயாகும். அத்துடன், வட்டியில்லா கடன் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தபோதும் அந்த நடவடிக்கை இடம்பெறுவதில்லை.

அதனால் இது தொடர்பில் கவனம் செலுத்தி, மாணவர்களின் எதிர்கால பயணத்துக்கு இந்த சந்தர்ப்பத்தை பெறறுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், இந்த வேலைத்திட்டத்தை

# கப்பல்கள் விபத்து தொடர்பாக சாட்சிகளை பெறுவதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 24

எஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து மற்றும் அது பற்றி சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் விரிவான விசாரணையை நடத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கை கடல் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு அண்மையில் தீர்மானித்தது.

அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இந்த விசேட குழு முதல் தடவையாக கடந்த 20ஆம் திகதி கூடியதுடன் குழுவின் எதிர்கால செயல்பாடுகள் குறித்த அடிப்படை விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து மற்றும் அது தொடர்பில் வழக்குத் தாக்கல்செய்தல், சுற்றுச்சூழல் பாதிப்புகள், ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா, அது தொடர்பில் அரச பொறிமுறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளன.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் அவ்வாறான அவசர நிலையை எதிர்கொள்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் குழு பரிந்துரைகளை வழங்கும் என்றும் தலைவர் தெரிவித்தார்.

குழுவின் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கும் அது தொடர்பான பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்கும் இரண்டு வார கால அவகாசம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த விசேட குழுவை எதிர்வரும் 27ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்குக் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளர் சிவலிங்கம்



மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு மாநகர சபையின் 24 ஆவது ஆணையாளராக பொறியியலாளர் நடராஜா சிவலிங்கம் நேற்று முன்தினம் மாநகர சபை அலுவலகத்தில் பதவியேற்றார்.

அன்று காலை அலுவலகத்துக்கு சமூகமளித்த புதிய மாநகர ஆணையாளர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் கடமையைப் பொறுப்பேற்றார்.

இதனையடுத்தது மாநகர உத்தியோகத்தர்களுடனான சம்பிரதாயபூர்வமான சந்திப்பொன்று நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் என்.மதிவண்ணன், மாநகரப் பொறியியலாளர் திருமதி எல்.சித்திரா தேவி, பிரதம கணக்காளர் திருமதி.ஜீ.எச்.சிவராஜா, மாநகர ஆயுர்வேத வைத்தியர் திருமதி பி.பார்த்தீபன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கே. பிரேமகுமார், இயந்திரப் பொறியியலாளர் என். யோகேந்திரன் உட்பட கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழிரர்கள் கலந்து கொண்டனர். (அ)

# சிறுவர்களிடையே தொழுநோய் உயர்வு

கொழும்பு, ஜூன் 24

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 48 சிறுவர் தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் நாட்டில் இதுவரை 600 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மொத்த தொழுநோயாளர்களில் 8.4 வீதமானோர் சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழு நோயாளர் பிரிவு தெரிவிக்கின்றது.

இதேவேளை, அடுத்த மாதத்திலிருந்து தொழுநோயாளிகளை அடையாளம் காணும் செயல்பாடுகளில் தன்னார்வ குழுக்களை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தை உள்ளடக்கி முதல் கட்டத்தில் இந்த செயல்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொழுநோயாளர் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார். (ஐ)

# மன்னார் வளைகுடா கரையில் இறந்த கடல் பசு ஒதுங்கியது!



இராமேஸ்வரம், ஜூன் 24

மன்னார் வளைகுடா கடற்கரையில் கடல் பசு ஒன்று இறந்த நிலையில் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இராமநாதபுரம் - பாம்பனுக்கு அருகில் உள்ள தெற்கு மன்னார் வளைகுடா பகுதியிலுள்ள தோணித்துறை கடற்கரையில் இறந்த நிலையில் இந்த கடற்பசு கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக இராமேஸ்வரம் வனவள திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்றிருந்தனர்.

உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய இந்த கடற்பசு சுமார் 8 வயது மதிக்கத்தக்கது என்பதுடன் 1,500 கிலோ எடை கொண்டதாக இருக்கலாம் என இராமேஸ்வர வனவள திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பரிசோதனையின் பின்னர் கடற்பசுவை கடற்கரை மணலில் புதைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
24.06.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இப்போதும் வாய்ப்புகள் உள்ளன

தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் தோல்வியின் பாதையில் பயணிப்பது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். சூழ்நிலைகளை துல்லியமாகக் கணித்து குறிப்பிட்ட சூழலிலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதன் அவசியம் தொடர்பிலும் நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இது தொடர்பில் அரசியல் கட்சிகள் மட்டத்தில் காணப்படும் அதிருப்திகளையும் நாம் அறிவோம். ஆனால், ஒரு பொறுப்புள்ள ஊடகமென்னும் வகையில் உண்மைகளை அடித்துக் கூறுவதிலிருந்து நாம் விலகிநிற்க முடியாது. அரசியலை சரியான திசைவழி நோக்கி நகர்த்த வேண்டுமாயின் சுயவிமர்சனம் சார்ந்த பார்வை கட்டாயமானது.

யுத்தம் நிறைவுற்று 14 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும்கூட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் சிறியளவில்கூட பூர்த்திசெய்யப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், யுத்தத்துக்கு பின்னரான அரசியல் சூழலிலும் தமிழர்களால் வெற்றியின் பாதையில் பயணிக்க முடியவில்லை. இருக்கின்ற நிலையிலிருந்து முன்னோக்கி நகர்வதையே, இங்கு வெற்றியென்று குறிப்பிடுகின்றோம். 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின்போது சில வாய்ப்புகள் கிடைகப்பெற்றபோதிலும்கூட, அதனை தமிழ் தலைமைகள் என்போர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் சறுக்கி விட்டுப் பின்னர், மற்றவர்களை குற்றஞ்சாட்டுவதில் எவ்வித பயனுமில்லை.

இப்போது ரணில் தலைமையிலான பலவீனமான அரசாங்கம் மீண்டும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் பேசிவருகின்றது. சர்வதேச அரங்குகளிலும் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் ரணில் பேசிவருகின்றார். நல்லிணக்க முயற்சியில் தமிழர் பக்கம் ஒரு வாய்ப்புண்டு. இன்னொரு வகையில் நல்லிணக்கம் என்பது தமிழருக்கான பேரம்பேசும் பலமாகும். ஏனெனில், தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் அது நல்லிணக்கம்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் யுத்தத்தில் தமிழர்களை வெற்றிகொண்டதாக சிந்திக்கும் சிங்கள அரசியல் சமூகம் நல்லிணக்க முயற்சியில் வெற்றிபெற வேண்டுமாயின், தோற்கடிக்கப்பட்டதாகக் கருதப்படும் தமிழர்களின் ஆதரவு அவர்களுக்கு தேவை. தமிழ் மக்களைப் புறக்கணித்து எதேச்சதிகாரமாகவும் அவர்கள் செயல்படலாம். கோட்டாபய அவ்வாறனதொரு நகர்வை மேற்கொள்ளவே முயற்சித்தார். அவ்வாறு அவர்கள் செய்ய நினைத்ததால் அதில் பிரச்னையில்லை. ஆனால், நல்லிணக்கம் ஏற்பட்டுவிட்டதாக அவர்களால் உலகத்தை நம்பவைக்க முடியாது.

இந்த இடத்தை தமிழ் தலைமைகள் என்போர் புத்திசாதுர்யமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் ஆதரவு தேவைப்படும் இடத்தை ஒரு பேரம் பேசும் உத்தியாக பயன்படுத்திக் கொள்ளலாம். படிப்படியாக முன்னேற்றங்களை காண்பியுங்கள் எங்களின் ஆதரவைத் தருகின்றோம் என்றவாறான அரசியல் தந்திரத்தை கையாளலாம். ஏனெனில், தமிழ் மக்களின் ஆதரவின்றி நல்லிணக்கத்தில் வெற்றியென்பது ஒருபோதுமே சாத்தியமற்றது. ஏனெனில், நல்லிணக்கத்தில் தமிழர்கள் சம பங்காளிகளாவர். இந்த பின்புலத்தில்தான் தமிழ் தலைமைகளின் ஆதரவுடன் விடயங்களை முன்னெடுக்க ரணில் முயற்சிக்கின்றார். ஆனால், ரணில் என்னும் ஒரு தனிநபரை நம்பி செயல்படுவது புத்திசாதுர்யமானதல்ல. வாய்ப்புகளை முன்வைத்து, அதனை கையாள்வதில் மட்டுமே தமிழ் தலைமைகள் சிந்திக்க வேண்டும்.

# 'அஸ்வெசும' திட்டம் தொடர்பில் ஆளும் - எதிர்க்கட்சிகள் அதிருப்தி!

*கொழும்பு, ஜூன் 24*

அரசாங்கத்தின் புதிய சமூக நலத்திட்டமான 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியான நபர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள கடுமையான முரண்பாடுகள் குறித்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

முதலில் பிரச்னையை எழுப்பிய சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார, ஜப்பான் போன்ற நாடுகளில் பணிபுரியும் சில செல்வந்தர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியான நபர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

"உண்மையில் உதவி பெற தகுதியுடையவர்களிடம் இருந்து பல முறைப்பாடுகளை பெற்றுள்ளோம். வெளிநாட்டில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளோம். இருப்பினும், பிரதமர் தலையிட்டு, இப்பிரச்னைக்கு தற்காலிக தீர்வு காண வேண்டும் என விரும்புகிறோம்," என்றார்.

வீட்டு வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் முறையான கணக்கெடுப்பை மேற்கொள்வது நல்லது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"முந்தைய சந்தர்ப்பங்களில் வீட்டு வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பை நான் கோரியுள்ளேன், மேலும் உதவி பெற உண்மையான தகுதியுள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக மீண்டும் ஒருமுறை கோரிக்கை விடுக்கிறேன். லேர்ன் ஏசியா நடத்திய ஆய்வில், இலங்கையில் வறுமையில் வாடும் மொத்த சனத்தொகை 40 இலட்சமாக இருந்த நிலையில் இந்த ஆண்டு 70 இலட்சமாக அதிகரித்துள்ளது" என்று அவர் கூறினார்.

"அஸ்வெசும" நலத்திட்ட உதவியை தற்காலிகமாக இடைநிறுத்தி சமுர்த்தியின் கீழ் தற்காலிக உதவிகளை வழங்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன முன்மொழிந்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் மன்னாரில் உள்ள மக்களுக்கு உதவிகள் கிடைக்காமல் வீதியில் இறங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சில அதிகாரிகளின் ஒத்துழையாமை முரண்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளது. "நோய்வாய்ப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகளை நலன்புரி திட்டத்தில் இருந்து நாம் எந்த வகையிலும் விட்டுவிட முடியாது," என்றும் அவர் கூறினார்.

அஸ்வெசும தொடர்பாக யாரேனும் மேல்முறையீடு செய்ய இன்னும் கால அவகாசம் உள்ளது - என்றார். (ஐ)

# இரண்டு வாள்களுடன் நவாலியில் ஒருவர் கைது!

*யாழ்ப்பாணம், ஜூன் 24*

இரு வாள்களுடன் 40 வயது நபர் ஒருவரை தாம் கைதுசெய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நவாலி வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இரு வாள்களுடன் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் இரண்டு வாள்களை எடுத்துச் சென்ற போது வீதியில் வைத்து மானிப்பாய் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நேர்முக வர்ணனை

*யாழ்ப்பாணம், ஜூன் 24*

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் வருடாந்த தேர் திருவிழா நேர்முக வர்ணனை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நேர்முக வர்ணனையை சைவப் புலவர் செ. த. குமரன் வழங்குவார். (ஐ)

# இலவச கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்!

*யாழ்ப்பாணம், ஜூன் 24*

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் என். வி. கியூ. சான்றிதழ் தர குறுங்கால கற்கைநெறிகளான அலுமினியம் பொருள் உருவமைத்தல் தொழில்நுட்பம், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், மோட்டார் வாகன வர்ணம் பூசுதல் தொழில்நுட்பம், கணிய அளவை உதவியாளர், கணினி வரைகலை வடிவமைப்பாளர் ஆகியவை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் அனைத்தும் முழுநேர, இலவச கற்கைநெறிகளாகும். இந்தப் பாடங்களை பயில விரும்புவோர் தாமதமின்றி நேரடியாக தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு 021 222 2358, 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 24 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.30 - 10.30
திதி : சஷ்டி




**மேடம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேளை முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் போட்டிகள் வரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**கன்னி**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**துலாம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பிமுக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிகை பிறக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# 6 ஆயிரம் வருடங்கள் பழமையான நாகரிகம் விருதுநகரில் கண்டறிவு



*சென்னை, ஜூன் 24*

*கீழடியைத் தொடர்ந்து, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடந்துவரும் அகழாய்வுகளால், வைப்பாற்றங்கரையில் 6 ஆயிரம் ஆண்டுகள் பழமையான நாகரீகத்தின் வரலாறு வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.*

*தமிழகத்தில் கீழடி, சிவகலை, மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய அகழாய்வுகளுடன் புதிதாக விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி துலுக்கர்பட்டி, தருமபுரி பெரும்பாலை என மொத்தம் 7 இடங்களில் அறிவியல் அடிப்படையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும் என கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் தற்போதைய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.*

*இந்த அறிவிப்புக்கு வரலாற்று ஆய்வாளர்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்தது. விருதுநகர் மாவட்டத்தில் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அந்த வகையில் வெம்பக்கோட்டையிலும் முதலாம் மற்றும் 2ஆம் கட்ட அகழாய்வுகளில் இது வரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்காலப் பொருள்கள் கிடைத்துள்ளன.*

*இது குறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகையில் : வெம்பக்கோட்டையில் அதிக அளவிலான நுண்கற் கருவிகள், சங்ககால மண்பாண்ட ஓடுகள், பெருங்கற்கால பண்பாட்டு எச்சங்கள் மற்றும் செப்பேடுகள் கிடைத்துள்ளன. வைப்பாற்றின் வடக்கு கரையோரம் அமைந்த இக்கிராமத்தில் 35 ஆண்டுகளுக்கு முன்பே தொல்லியல் சான்றுகள் தொல்லியல் அறிஞர் வேதாசலம் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரால் கண்டெடுக்கப்பட்டன.*

*அர்ச்சுனா நதி, அனுமன் நதி, குண்டாறு, தேவியாறு, மற்றும் வைப்பாறு போன்ற ஆற்றங்கரைகளையொட்டி அமைந்துள்ள இடங்களில் கடைக்கற்காலத்தைச் சேர்ந்த நுண்கற் கருவிகள் இன்றளவும் தொடர்ந்து கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. கி. மு. 4000 முதல் கி. மு. 3000 வரையிலான இடைப்பட்ட காலத்தில், இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து உள்ளனர் என்பதை தொல்லியல் சான்றுகள் நிரூபிக்கின்றன.*

*கடலில் கிடைக்கும் கிளிஞ்சல்களால் செய்யப்பட்ட கைவளையல்கள் மற்றும் யானையின் கடை வாய்ப்பல் ஒன்று கல்லாக மாறி புதைபடிம வடிவில் இங்கு கிடைத்துள்ளது. 1863ஆம் ஆண்டில் ரொபேர்ட் புரூஸ் பூட் என்ற வெளிநாட்டு அறிஞர், விருதுநகர் மாவட்டம் ஆவியூரில் பழைய கற்கால சில்லுக் கருவியை கண்டறிந்துள்ளார்.*

*சங்க காலத்தை சேர்ந்த கறுப்பு - சிவப்பு மண்பாண்ட ஓடுகள் மற்றும் இரும்பு பொருட்களும், வெம்பக்கோட்டையைச் சுற்றியுள்ள மேடான பகுதிகளின் மேற்பரப்பில் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிப்புடன் கூடிய மட்பாண்ட ஓடுகளும் கிடைத்து வருகின்றன. இதன் மூலம் இங்கு வாழ்ந்த தமிழ்ச் சமூக மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்துள்ளதை உணர முடிகிறது. ரோமானிய மட்பாண்ட ஓடுகளும் இங்கு அதிகமாக கிடைப்பதால் இங்குள்ள மக்கள் ரோமானியர்களோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது.*

*மேலும், 1574ஆம் ஆண்டில் எழுதப்பட்ட செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதில், வெம்பக்கோட்டையைச் சேர்ந்த புல்லா கவுண்டர் என்பவர், அதிவீரராம பாண்டியனின் பண்டாரத்தில் வாதாடி இனவரி இல்லாமல் தடுத்துள்ள செய்தி இச்செப்பேட்டில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. வெம்பக்கோட்டை விஜய கரிசல்குளம் மேட்டுக்காட்டில் நடந்து வரும் அகழாய்வில் கிடைத்த சுமார் 3 ஆயிரம் பொருட்கள் இங்குக் கண்காட்சி அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.*

*(ஐ)*

# நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்பதாக பா. ஜ. க. அறிவிப்பு

*சென்னை, ஜூன் 24*

“நடிகர் விஜய் உள்ளிட்ட யார் பா. ஜ. க. கூட்டணிக்கு வந்தாலும் ஏற்றுக்கொள்வோம்” என்று சட்டப்பேரவை பா. ஜ. க. குழு தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு, ‘அடுத்த முதல்வர் நடிகர் விஜய்’ என அவரது ரசிகர்கள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். ஆசைப்படுவது தவறில்லை. விஜய் உள்ளிட்ட யார் பா. ஜ. க. கூட்டணிக்கு வந்தாலும் ஏற்றுக்கொள்வோம். பா. ஜ. க. எந்த மதத்தையும் விமர்சனம் செய்வதில்லை. பா. ஜ. க. மதவாத கட்சியும் அல்ல. ‘நடிகர்கள் அரசியலுக்கு வருவது சாபக்கேடு’ என சொல்வது தவறு. அரசியலுக்கு வருவது அவர்களுடைய விருப்பம் - என்றார்.

இதேபோன்று, நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்பதாக பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் தெரிவித்தார். கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ‘அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்கிறது. மத்திய அரசையும், பிரதமர் மோடியையும் விமர்சித்து பேசியவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. ருவிற்றரில் சிறியதாக கருத்து பதிவிட்டால் கூட கைது நடவடிக்கை என்றால், இந்த அரசு வலுவிழந்து உள்ளதா? நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். மக்களுக்கு தேவையான பணிகளை செய்பவர்களாக நடிகர்கள் இருக்க வேண்டும். அரசியலை திரைப்படப் படப்பிடிப்பு போன்று நினைத்து நடிகர்கள் வரக்கூடாது - என்றார்.

# கருணாநிதி நினைவு சின்னம் மத்திய அரசாங்கமும் அனுமதி!

## விரைவில் பணிகள் ஆரம்பம்

*சென்னை, ஜூன் 24*

சென்னை மெரினாவில் கடலுக்கு நடுவே முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பேனா நினைவுச் சின்னம் அமைக்க மத்திய அரசின் கடலோர ஒழுங்குமுறை ஆணையமும் அனுமதி வழங்கியதால் விரைவில் பணிகள் தொடங்கவுள்ளன.

சென்னை மெரினா கடற்கரையை ஒட்டி கடலுக்கு நடுவே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நினைவாக பேனா நினைவு சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவு எடுத்தது. இது தொடர்பில் நடத்தப்பட்ட கருத்தறியும் கூட்டத்தில் எதிர்ப்பை விட ஆதரவு அதிகம் என்று கூறியது.

இதைத் தொடர்ந்து மத்திய அரசின் சுற்றுச் சூழல் ஆணையம் 15 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியது. இதனை தொடர்ந்து தற்போது மத்திய அரசின் கடலோர ஒழுங்குமுறை ஆணையமும் அனுமதி வழங்கியுள்ளது.

இதன் மூலம் முன்னாள் முதல்வர் கருணாநிதி பேனா நினைவுச்சின்னம் அமைப்பதற்கு தேவையான அனைத்து அனுமதிகளும் கிடைத்திருப்பதால், விரைவில் பணிகளை தொடங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. (ஐ)

# கள்ள மணல் ஏற்றிய டிப்பருடன் சாரதி பொலிஸாரின் பிடியில் இருந்து கடத்தல்!

## கிளிநொச்சியில் மணல் கடத்தல்காரர்கள் அட்டகாசம்

**கிளிநொச்சி, ஜுன் 24**

**மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்துடன் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து அழைத்து வரும்போது, மற்றொரு மணல் கடத்தல் குழு வீதியை மறித்து, கைது செய்யப்பட்ட நபரையும், டிப்பர் வாகனத்தையும் கடத்திச் சென்ற அதிர்ச்சிச் சம்பவம் நடந்துள்ளது.**

கிளிநொச்சி பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பொலிஸாரின் பிடியிலிருந்தவரையும், வாகனத்தையும் வலுக்கட்டாயமாக விடுவித்த குழுவொன்றைக் கண்டறிய கிளிநொச்சி பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் வீதியிலுள்ள காப்புக்காடு பகுதியில் மணல் கடத்தல் இடம்பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து கிளிநொச்சி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த புதன்கிழமை காலை சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

பொலிஸ் குழுவினர் காப்புக் காட்டுக்குள் பிரவேசித்தபோது அங்கு மணல் ஏற்றப்பட்ட டிப்பர் வாகனம் ஒன்று இருந்ததையடுத்து டிப்பர் வாகன சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

டிப்பர் வாகனத்துடன் சாரதியை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து கொண்டிருக்கும்போதே மற்றுமொரு டிப்பர் வாகனத்துடன் வீதியை மறித்த சிலர் சந்தேக நபரை மணல் லொறியுடன் அழைத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தனர்.

அப்போது, பொலிஸார் சிவில் உடையில் இருந்ததால், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தான் பொலிஸ் எனக் கூறி, வீதி மறியலில் ஈடுபட்டவர்களிடம் அடையாள அட்டையை காட்டினார்.

அங்கு, பொலிஸ் உத்தியோகத்தரின் அடையாள அட்டை மற்றும் அவரது கையிலிருந்த கையடக்கத் தொலைபேசி என்பன தூக்கி எறியப்பட்டு, சந்தேக நபருடன் டிப்பர் வாகனத்தையும் ஆறு பேர் கொண்ட குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# சஜித்தை சந்தித்த சர்வதேச நிபுணர்!



கொழும்பு, ஜுன் 24

முன்னாள் கனேடிய பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற அபிவிருத்தி மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான சர்வதேச சிரேஷ்ட கொள்கை வகுப்பு நிபுணருமான கெவின் டிவொக்ஸ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாராளுமன்ற ஜனநாயகம், செயலாற்றுகை, முறைமையாக்கல் அபிவிருத்தி, மக்கள் பங்கேற்பு, ஜனநாயக ஆளுகை, பாராளுமன்ற அலுவல்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு, தொழிநுட்ப ஆலோசனை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கொள்கை நிபுணரும் ஆட்சி முறைமை தொடர்பான பிரிவின் தலைவருமான சந்திரிகா கருணாரத்ன உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சை ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஜுன் 24

யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- விழித்திரை சத்திர சிகிச்சையானது சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினாலும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் கடந்த 2 வருடங்களாக நடைபெறவில்லை.

இந்நிலையில் தற்பொழுது விழித்திரை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஷைலா பரதன் பதில் கடமையேற்றுள்ளார்.

அவர் தமது சேவையினை மக்களுக்கு வழங்கு முகமாக வாரத்துக்கு ஒருமுறை ஆறு பேர் வீதம் 100 சத்திர சிகிச்சைகளை நேற்று முதல் மேற்கொள்ள உள்ளார்.

அலாக்கா பவுண்டேசன் நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் இந் நிகழ்ச்சித்திட்டமானது யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது-என்றார். (அ)

# 800 சாரதிகள், 290 நடத்துநர்களை சேவையில் இணைக்கும் இ.போ.ச.

கொழும்பு, ஜுன் 24

சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானோரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

520 சாரதிகளுக்கும் 170 நடத்துநர்களுக்கும் வெற்றிடம் நிலவுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

ஊழியர்கள் பற்றாக்குறையினால் பஸ் சேவையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வினூடாக சாரதிகள், நடத்துநர்களின் வெற்றிடங்களுக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கூறினார்.

அவர்களுக்கு ஜுலை மாத இறுதிக்குள் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

800 சாரதிகளும் 290 நடத்துநர்களும் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 400 பஸ்களில் கடந்த மார்ச் மாதம் முதல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை 160 பஸ்கள் திருத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றை எதிர்வரும் ஜுலை முதலாம் திகதியிலிருந்து சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டார். (அ)

# நல்லூர் வீரமாகாளியம்மன் கோயிலுக்கு பொதுமுகாமைத்துவம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜுன் 24

யாழ்ப்பாணம், நல்லூர் வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தை பொதுமுகாமைத்துவம் ஒன்றினை அமைத்து நிர்வகிப்பது தொடர்பில் ஆராய எதிர்வரும் திங்கள்கிழமை நல்லூர் பிரதேச செயலாளரினால் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் 3 குடும்பங்களைச் சேர்ந்த பூசகர்களின் பராமரிப்பில் இருந்தது. எனினும், அவர்களுக்குள் நீண்ட காலமாக முரண்பாடு காணப்படுகின்றது.

இந்த நிலையில் ஆலய மகோற்சவ உபயகாரர்கள், ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளும் பொதுமக்கள் இணைந்து, வீரமாகாளி அம்மன் ஆலயத்தை நிர்வகிப்பதற்கு என பொது முகாமைத்துவத்தை அமைக்குமாறும் எதிர்வரும் ஆண்டுகளில் திருவிழாவைத் தடையின்றி நடத்துவதற்கு ஆவன செய்யுமாறும் கோரி நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தொடர்புடைய பூசகர் குடும்பங்களை 26ஆம் திகதி காலையில் கலந்துரையாடலுக்கு வருமாறு நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஓராண்டுக்கு மேல் திரிபோஷா இல்லை!

## குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 24

3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான திரிபோஷா வழங்கும் திட்டம் ஓராண்டுக்கு மேலாக தடைப்பட்டுள்ளதென அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம் தெரிவிக்கின்றது.

இது குழந்தைகளின் போசாக்கு தரத்தை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடு என அரச குடும்ப நல சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு கவலை வெளியிட்டார்.

அண்மைக் காலமாக போஷாக்கு குறைபாட்டுக்கு உள்ளாகும் பிள்ளைகளின் வீதம் அதிகரித்துள்ள பின்புலத்தில் இதனை நிவர்த்தி செய்ய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்னவிடம் வினவியபோது-

சோளத்திலுள்ள அப்லா டொக்சின் அளவு குறித்து எழுந்துள்ள சந்தேகத்தால் சிறு பிள்ளைகளுக்கு திரிபோஷா தயாரிக்க முடியாதுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

அந்தப் பிரச்னையை உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக தீர்த்து தருமாறு கோரியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# மீண்டும் பிரதமர் பதவிக்கு போட்டியிடமாட்டார் மகிந்த

## லொஹான் ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 24

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவிக்கு போட்டியிடமாட்டார் என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு தேவையானதை விட அதிகமாக செய்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்காக பலவற்றை செய்த தலைவர் என நான் நினைக்கிறேன்.

முன்னாள் ஜனாதிபதி ஓய்வு பெற்று தனது ஓய்வு நேரத்தை அனுபவிக்கவேண்டிய தருணம் தற்போது வந்துள்ளது. எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்க்க பொதுஜன பெரமுன தயங்கப் போவதில்லை. அது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் அமையும். பொதுஜன பெரமு



னவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருப்பதாக வெளியான செய்திகள் பொய்யானவை-என்றார்.

(அ)



# ஜப்பான் கப்பல் கொழும்பில்

கொழும்பு, ஜூன் 24

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் இகாசுச்சி உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று முன் தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

வருகை தந்த கப்பலை இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

இகாசுச்சி டிடி-107 கப்பல் 207 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது.

கப்பலின் கப்டன், மேற்கு கடற்படை தலைமையகத்தில் நேற்று முன் தினம் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித்தார்.

(அ)

# நல்லூர் பிரதேச சபையினால் வாழ்வாதார உதவி வழங்கல்



யாழ்ப்பாணம், ஜூன் 24

நல்லூர் பிரதேச சபையின்ய வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டம் நேற்று நல்லூர் பிரதேச சபை முன்றலில் நடைபெற்றது.

இந்த திட்டத்தில் 57 பயனாளிகளுக்கான சைக்கிள்களும், 44 பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி இலக்கை அடையும் வகையில் சபையின் வருடாந்த வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டின்கீழ் சபை ஆளுகைக்குள் வதியும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பல்வேறுபட்ட வாழ்வாதார உதவிகளை வேண்டிநிற்கும் மக்களுக்காக நல்லூர் பிரதேச சபை இந்த உதவித்திட்டங்களை நேற்று வழங்கியது.

இந்த நிகழ்வு பிரதேச சபையின் செயலாளர் ஜெலீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சிறீவர்ணன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இவ்வாறான உதவிகளை நல்லூர் பிரதேச சபை வருடா வருடம் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் ஒரு மாதத்துக்கு மேல் தடைப்பட்டுள்ள ஸ்கான்

கொழும்பு, ஜூன் 24

மஹரகம அபெக் ஷா புற்றுநோய் வைத்தியசாலையில் ஒரு மாதத்திற்கு மேலாக படுக்கை ஸ்கான் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

படுக்கை ஸ்கான் மேற்கொள்ளவதற்காக அனுப்பப்படும் நோயாளர்களுக்கான எவ்.டீ.ஜீ மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம கூறினார்.

இதனால் படுக்கை ஸ்கான் செய்யவேண்டிய நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த ஸ்கான் செயற்பாடுகளை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதாயின் குறைந்தபட்சம் 3 இலட்சம் ரூபா தேவைப்படும் என சானக்க தர்மவிக்ரம குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அருண ஜயசேகர தெரிவிக்கையில்-

ஸ்கான் செய்வதற்கு தேவையான மருந்துகளை இறக்குமதி செய்யும் முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இறக்குமதியாளர்களை பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலால் மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# விகாரையில் வழிபாட்டுக்கு சென்ற உக்ரேனிய பெண் துஷ்பிரயோகம்!

## 19 வயது இளைஞர் கைதாகினார்

கொழும்பு, ஜூன் 24

ஹபராதுவ, பெய்ல கொட சைத்யலங்கார விகாரையில் வழிபாடு செய்யச் சென்ற உக்ரேனிய சுற்றுலாப் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின்பேரில் 19 வயது இளைஞனை ஹபராதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உனவட்டுன பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உனவடுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள இந்த சுற்றுலாப் பெண், கோயிலுக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பெண் நேற்று முன்தினம் வழக்கம்போல் கோயிலுக்குச் சென்று போதி மரத்தை வழிபட்டுள்ளார்.

அப்போது, குறித்த சந்தேக நபர் வந்து புத்தரின் வீட்டுக்கு வருமாறு பெண்ணை அழைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனின் அழைப்பின் பிரகாரம், புத்தரின் இல்லத்தை வணங்கிவிட்டு வெளியே வந்தவுடன் குறித்த இளைஞன் தன்னை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு ஓடிவிட்டதாக பொலிஸாரிடம் குறித்த பெண் கூறியுள்ளார்.

இதனை அடுத்து சந்தேகத்தின் பேரில் 19 வயது இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.

# தீர்வு காண முடியாத தலைவர்கள் இந்த நாட்டுக்குத் தேவையில்லை

## கூறுகிறார் ஐ.தே.க. பொதுச் செயலர்

கொழும்பு, ஜூன் 24

பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாத தலைவர்கள் இந்த நாட்டிற்குத் தேவையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளையின் மீள்புனரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

1948 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இந்த நாட்டு மக்களிடம் இலங்கையர் என்ற உணர்வு மட்டுமே இருந்தது.

சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மதங்களாகவும் இனங்களாகவும் மொழிகளாகவும் பிரிந்து அரசியல் ரீதியாக பேதங்களை ஏற்படுத்தினார்கள்.

இதன் காரணமாக அரசியல்வாதிகள் பலம் வாய்ந்தவர்களாகவும் மக்கள் பின்தங்கிய நிலையை அடைந்தது மட்டுமே 75 வருடங்களாக நடந்துள்ளது.



சிங்கப்பூர், மலேசியா போன்று நாடுகளில் அனைத்து இன மக்களும் ஒன்றுபட்டு ஒரே நாட்டவர்களாக இருக்கும் காரணத்தினால்தான் அங்கு சட்டமும் ஒரேவிதமாக அமுல்படுத்தப்படுகின்றது.

அந்தவகையில், எமது நாடும் சுதந்திம் பெற்று நூற்றாண்டை அடையும்போது முன்னேற்றம் அடைந்த நாடாக அமையவேண்டும்.

டிஎஸ்.சேனநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்தபோது இருந்த அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் கொள்கையானது இன்று ரணில் விக்ரமசிங்கவின் காலத்திலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி இலங்கையில் உள்ள மக்கள் அனைவரையும் இலங்கையர்கள் என்ற அடிப்படையிலேயே நோக்குகின்றார்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கவேண்டும்.

ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்கும்போது இந்த நாடு பாரிய பின்னடைவிலிருந்தது.

அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிபோல் இருந்த நாட்டை குறுகிய காலத்தில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் இருந்து சாதாரண விடுதிக்கு மாற்றுவது போன்றதொரு செய்பாட்டை ஜனாதிபதி மேற்கொண்டார்.

நன்கு சிகிச்சையளித்து வைத்தியசாலையிலிருந்து வெளியில் கொண்டுவருவதற்கான நடவடிக்கையையே இன்று ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார்.

அதற்கு எதிரான தீர்மானங்கள் எடுக்கப்படுமானால் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்ட நோயாளியை மீண்டும் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்கு செல்ல நேரிட்டு விடும்-என்றார். (அ)

# கடும் அபாயத்தில் சுகாதாரத்துறை!

## மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 24**

**இலங்கையில் தற்போது மருத்துவ நிபுணர்களுக்கு பாரிய வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இது நாட்டின் சுகாதாரத்துறைக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாக மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.**

கணிசமான எண்ணிக்கையிலான மருத்துவ நிபுணர்கள் புலம்பெயர்வை தெரிவு செய்துள்ளனர்.

சில நிபுணர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை, இலங்கையின் நலிவடைந்த சுகாதாரத் துறைக்கு மேலும் சிக்கல்களை தோற்றுவித்துள்ளதாக நிபுணர்கள் கணித்துள்ளனர்.

அத்துடன் அண்மையில் திருத்தப்பட்ட மருத்துவர்களின் 60 வயதிற்குள் ஓய்வுபெறும் வயதும் பிரச்னையை தீவிரமாக்கியுள்ளது.

இந்தநிலையில், 2024 ஆம் ஆண்டிற்குள் நாட்டுக்கு 4,299 மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

இடமாறுதல் பட்டியலின் படி, இருதயநோய் நிபுணர்கள், நுண்ணுயிரியல் நிபுணர்கள், தோல்நோய் நிபுணர்கள், அவசரகால மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் நோயியல் நிபுணர்கள் உட்பட 750 பணியிடங்கள் இந்த ஆண்டுக்குள் அவசரமாக நிரப்பப்பட வேண்டியுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் அதிகாரிகள் உடனடியாகச் செயற்படத் தவறினால், அடுத்த ஆண்டுக்குள் தேவைப்படும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை 1,000ஐத் தாண்டும் என்று இந்தத் துறையில் உள்ள வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது சுமார் 2,007 நிபுணர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்த எண்ணிக்கை பொது மக்களின் மருத்துவத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை.

மருத்துவர்கள் ஆனந்த விஜேவிக்ரம, லக்குமார் பெர்னாண்டோ, கோட்டாபய ரணசிங்க, ஆனந்த லமாஹேவகே, மற்றும் நிஷங்க ஜயவர்தன போன்ற 60 முதல் 63 வயதுக்குட்பட்ட 300 மருத்துவ நிபுணர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் உடனடி ஓய்வு பெறுவார்கள் என்பது பிரச்னையை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

இதேவேளை, நாட்டில் உள்ள 18 இருதய சத்திர சிகிச்சை நிபுணர்களில் ஒன்பது பேர் சேவையை விட்டு வெளியேற வாய்ப்புள்ளது.

இதனால் நாட்டில் உள்ள பல இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவுகள் மூடப்படும் அபாயம் உள்ளது.

கொழும்பு, காலி மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள சில சிறப்புப் பிரிவுகளும் இதில் அடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# சர்வதேச நியமங்களை மீறியே விமானிகள் இங்கு சேவையில்!

## சபையில் கூறினார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன் 24

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையிலுள்ள விமானிகள், சர்வதேச நியமங்களை மீறியே பணிபுரியவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்ட நிலையில் சஜித் பிரேமதாஸ இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த 6 மாத காலப்பகுதியில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையில் இருந்து 70 விமானிகள் பணியில் இருந்து விலகியுள்ளனர். தற்போது விமான சேவையில் உள்ள விமானிகள் எண்ணிக்கை 260 இற்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்த வருடம் மேலும் 18 விமானிகள் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையில் இருந்து விலகவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இலங்கைக்கு மொத்தமாக 330 விமானிகள் தேவைப்படுகின்றனர்.

ஆனால் தற்போது 260 விமானிகள் மட்டுமே உள்ளனர்.

இந்நிலையில் தற்போதுள்ள விமானிகள், சர்வதேச நியமங்களை மீறியே பணிபுரியவேண்டியுள்ளது.

தற்போதுள்ள விமானிகளுக்கு மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

ஓய்வு பெறுவதற்கான மணித்தியாலங்கள் வழங்கப்படாவிட்டால் அவர்கள் ஆபத்தான நிலையை எதிர்நோக்குவார்கள்.

அதிகளவான சேவையை விமானிகளிடம் இருந்து பெற்றால் பல பிரச்னைகள் ஏற்படும்.

எனவே இந்த விமானிகளின் பற்றாக்குறை தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)

# சிறி லங்கன் எயார்லைன்ஸில் 80 விமானிகள் பற்றாக்குறை!

கொழும்பு, ஜூன் 24

சிறிலங்கன் எயார்லைன்ஸின் 80 விமானங்களுக்கு விமானிகள் இல்லை என குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜூன் 18 முதல் சிறிலங்கன் எயார்லைன்ஸின் 13 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரத்துச்ச் செய்யப்பட்ட விமானங்களில் பயணம் செய்த பயணிகளை அண்மையிலுள்ள ஹோட்டல்களில் தங்க வைத்துள்ளனர். எவ்வளவு செலவானது என்பது யாருக்கும் தெரியாது.

விமான நிறுவனத்தை விற்பனை செய்வதற்கான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

நான் லொத்தர் திணைக்களம் பற்றி பேசினேன். எனினும் அது எந்தத் தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்படவில்லை. ஏனென்றால் அவற்றை ஒலிபரப்பும்போது விளம்பரங்கள் கிடைக்காது. மேலோட்டமாகப் பார்த்தால் ஒலிபரப்பு ஆணையச் சட்டத்தை உருவாக்குவது நல்லது-என்றார். (அ)

# பாடசாலை ஆய்வுகூடத்தை உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஏழு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூன் 24

நன்னேரிய மகா வித்தியாலயத்தின் கணித ஆய்வுகூடத்தை உடைத்து பொருட்களை திருடிய மாணவர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக நன்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று மாணவர்கள் கணித அறையின் ஜன்னலை உடைத்து 7 ரப் கணினிகள் மற்றும் கணினி உபகரணங்களை திருடிச் சென்றனர்.

திருடப்பட்ட பொருட்கள் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பின்னரே கண்டு பிடிக்கப்பட்டதாகவும், திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)

# துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் படைச்சிப்பாய் வைத்தியசாலையில்!

மன்னார், ஜூன் 24

மன்னாரில் கமாண்டோ சிப்பாய் ஒருவர் இரு கால்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் - அடம்பன் இராணுவ கொமாண்டோ பயிற்சிப் பாடசாலையில் கடமையாற்றும் ஒருவரே இவ்வாறு நேற்று முன் தினம் மாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது இரண்டு கால்களிலும் எவ்வாறு துப்பாக்கிச்சூடு பட்டுள்ளது என்ற விவரங்களை அறிய அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தம்புள்ளை பிரதேசத்தை சேர்ந்த திலகரத்ன என்பவரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# கைதாவோரை விசாரணை முடிவடையும் வரை தடுத்து வைக்கச் சட்டத்தில் மாற்றம் அவசியம்!

## பொலிஸ் பேச்சாளர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

துப்பாக்கிச்சூடு மற்றும் பாதாள உலகக்குழு செயற்பாடுகள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்களை, வழக்கு விசாரணை நிறைவடையும் வரை, தடுத்து வைக்கும் வகையில், சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த தரப்பினர், குறிப்பிட்ட காலத்துக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் வெளியே சென்று அந்தக் குற்றச் செயல்களிலேயே மீண்டும் ஈடுபடுகின்றனர்.

சில நபர்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

எனவே, வழக்கு நிறைவடையும் வரையில், அவர்களை விளக்கமறியலில் வைக்கக்கூடிய நிலைமை இருந்தால், இந்த விடயத்தில் ஏதேனுமோர் அளவுக்கு கட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்-என்றார்.

(அ)

# ஜூன் 30 விசேட வங்கி விடுமுறை

கொழும்பு, ஜூன் 24

விசேட வங்கி விடுமுறையாக ஜூன் 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க விடுமுறை நாட்கள் சட்டத்தின் 10 (1) ஆவது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

(அ)

# தேசபந்து தென்னக்கோனின் ‘ரிட்’ மனு தீர்ப்பு திங்களன்று

கொழும்பு, ஜூன் 24

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்தபோது ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் தமக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை இரத்துச் செய்யுமாறு கோரி தேசபந்து தென்னக்கோன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த தீர்ப்பு நேற்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட இருந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு இது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளது. (அ)

# ஜோ பைடனுக்கு சந்தனப் பெட்டி, அவரது மனைவிக்கு வைரக்கல்

## மோடி வழங்கிய பரிசுகள் என்னென்ன?

அமெரிக்காவிற்கு நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அமெரிக்க அதிபருக்கும் அவரது மனைவிக்கும் பல பரிசுகளை வழங்கி நட்பு பாராட்டினார்.

அமெரிக்க அதிபர் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்துகொள்வதற்காகச் சென்ற மோடி., ஜோ பைடனுக்கு சந்தனப் பெட்டியையும் அவரது மனைவி ஜில் பைடனுக்கு வைரக்கல் ஒன்றையும் பரிசளித்தார்.

இதற்கு முன்னதாக புதனன்று, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் பல்வேறு நாட்டின் பிரதிநிதிகள் யோகா பயிற்சியில் ஈடுபட்டனர். ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அந்த நிகழ்ச்சியில் பேசிய நரேந்திர மோடி, “எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒன்பது வருடங்களுக்கு முன்பு இதே ஐ.நா சபையில் ஜூன் 21ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக முன்மொழியும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மொத்த உலகமும் எனது அந்த யோசனைக்கு ஆதரவு அளித்தது குறித்து மிகுந்த மிகிழ்ச்சி.

யோகா இந்தியாவிலிருந்து வந்த ஒன்று, மிகவும் பழமையான பாரம்பரியம். யோகா இலவசமானது. பதிப்புரிமை, காப்புரிமை, ராயல்டி கட்டணங்களற்றது. எந்த வயதினரும், பாலினத்தவரும் யோகாவை பின்பற்றலாம். யோகாவை வீடு, பணியிடம் என எங்கு வேண்டுமென்றாலும் செய்யலாம். மத நம்பிக்கை, கலாச்சாரத்தை கடந்து யோகா அனைவருக்குமானது” என்றார்.

யோகா நிகழ்ச்சிக்கு பின்பு வாஷிங்டன் சென்ற பிரதமர் மோடி, அங்கு ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் அளித்த சிறப்பு விருந்தில் கலந்துகொண்டார்.

ஐ.நா தலைமையகத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் சுமார் 135 நாட்டின் பிரதிநிதிகள் பங்கேற்று கின்னஸ் சாதனை படைக்கப்பட்டதாக வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

வரும் 24ஆம் தேதி வரை மோடி அமெரிக்காவில் இருப்பார்.

**மோடியின் பயணம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?**

பிரதமர் நரேந்திர மோடியின் இந்த அமெரிக்க பயணம், இந்திய - அமெரிக்க உறவில் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

இதற்குமுன் அதிகார்ப்பூர்வமாக நான்கு முறை மோடி அமெரிக்கா சென்றிருந்தாலும், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவரை உபசரிக்க இருப்பது இதுதான் முதல்முறை.



மோடி அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். 2016ஆம் ஆண்டு ஒருமுறை அங்கு உரையாற்றியதால், அமெரிக்க நாடளுமன்றத்தில் இரண்டு முறை உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் ஆகவிருக்கிறார் மோடி.

மோடியின் இப்பயணம் இந்தியாவும் அமெரிக்காவும் சமமான நண்பர்கள் என்பதையும், மோடியின் பிம்பம் உலகளவில் வளர்ந்துள்ளது என்பதையும் காட்டுகிறது என்கிறார் குருகிராமிலுள்ள மேனேஜ்மெண்ட் அண்ட் டவளப்மென்ட் இன்ஸ்டிட்யூட்டை சேர்ந்த அஜய் ஜெயின்.

அமெரிக்கா வாழ் இந்தியர்களுடனான மோடியின் உரையாடல்கள் கலாசார உறவுகளை வலுப்படுத்த உதவியிருக்கின்றன, என்றும் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டின் ‘ஹௌடி மோடி’ நிகழ்வு அமெரிக்கா வாழ் இந்தியர்கள் மற்றும் இந்தியா இடையே இருக்கும் பிணைப்பைக் காட்டுகிறது. இது போன்ற நிகழ்வுகள் இந்தியாவின் நற்பிம்பத்தை மேம்படுத்துகிறது, என்று அஜய் ஜெயின் கருதுகிறார்.

தனிப்பட்ட முறையில் இப்பயணத்தின் மூலம் மோடி அடுத்த வருடம் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலிலும் லாபம் ஈட்டப்பார்ப்பார், என்கின்றனர் வல்லுநர்கள்.







**இப்பயணத்தின் மூலம் அமெரிக்காவுக்கு என்ன பலன் கிடைக்கும்?**

அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணமாகச் செல்வது எந்த ஒரு நாட்டின் தலைவருக்கும் ஒரு கௌரவம்தான். ஆனால் மோடியின் இப்பயணத்தின்மூலம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் என்ன பலன்கள் கிடைக்கும்?

இப்பயணத்திற்குப் பின்னால் அமெரிக்காவின் நலன் ஒளிந்திருப்பதாகக் கூறுகிறார் லண்டனில் வசிக்கும் மூத்த பத்திரிகையாளர் பிரசூன் சோன்வால்கர். “அமெரிக்க-இந்திய உறவின் வரலாற்றில், அமெரிக்கா எப்போதும் தனது நலன் சார்ந்தே இயங்கி வந்திருக்கிறது. அது இந்தியாவை ஆத்திரமூட்டினாலும் கூட. இப்போதும், இரு நாடுகளின் கொள்கைகளும் வேறாக இருப்பினும், அமெரிக்கா இந்தியாவை சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கும்,” என்கிறார்.

அதேபோல், அமெரிக்காவின் பல பெரிய நிறுவனங்கள் வேலையாட்களுக்காக இந்தியாவை நம்பியிருப்பதால், பொருளாதார ரீதியிலும் அமெரிக்காவுக்கு இந்தியா முக்கியம், என்று கூறுகிறார் பேராசிரியர் அஜய் ஜெயின்.

இருநாட்டு உறவு, பொருளாதாரம், உலக நாடுகளுக்கிடையே இந்தியாவின் இடம், ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் மோடியின் இப்பயணம் அமையும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

**மோடி பரிசளித்த சந்தனப் பெட்டியும், வைரக் கல்லும்**

அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய பிரதமர் மோடிக்கு அமெரிக்க அதிபர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். இதில் கலந்துகொள்வதற்காகச் சென்ற மோடியை ஜோ பைடனும், அவரது மனைவி ஜில் பைடனும் வரவேற்றனர்.

அப்போது பிரதமர் மோடி அவர்களுக்கு சில பரிசுகளை வழங்கினார். ஜோ பைடனுக்கு சந்தனப் பெட்டியையும், உபநிஷத புத்தகங்களையும் வழங்கிய பிரதமர்., ஜில் பைடனுக்கு வைரக்கல் ஒன்றையும் பரிசளித்தார்.

ஜோ பைடனுக்கு வழங்கப்பட்ட சந்தனப் பெட்டி, நுணுக்கமான வேலைபாடுகளைக் கொண்டிருந்தது. அதனுள் வெள்ளியிலான ஒரு விநாயகர் சிலையும், வெள்ளி விளக்கும் இருந்தன.

மேலும் அந்த சந்தனப்பெட்டிக்குள் ‘தஸ் தனம்’ என்ற பரிசும் இருந்தது. இது ஒருவர் 80 வயதை பூர்த்தி செய்யும் போது வழங்கப்படும் பரிசுப்பொருள் ஆகும். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வருகின்ற நவம்பர் மாதம் தனது 81வது வயதை அடைகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர ஜோ பைடனுக்கு வழங்கப்பட்ட சந்தனப் பேழைக்குள், 10 உபநிஷதங்கள் அடங்கிய நூலும் இருந்தது.

அதேபோல் ஜோ பைடனின் மனைவி ஜில் பைடனுக்கு ஆய்வுக்கூடத்தில் வளர்க்கப்பட்ட வைரக்கல்லை, பிரதமர் மோடி பரிசாக வழங்கினார்.

**ஜோ பைடன் மோடிக்கு என்ன பரிசளித்தார்?**

பிரதமர் மோடியிடம் இருந்து பரிசுகளை பெற்றுக்கொண்ட அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவருக்கு பதில் பரிசுகளை வழங்கினார்.

அமெரிக்க கவிஞர் ராபர்ட் ப்ராஸ்ட் கையெழுத்திட்ட புத்தகம் உள்பட பல புத்தகங்களை ஜோ பைடன் மோடிக்கு வழங்கினார். அதனுடன் ஒரு பழமையான கேமராவையும், அமெரிக்க வனவிலங்குகள் தொடர்பான புத்தகம் ஒன்றையும் தனது கையெழுத்துடன் அவர் மோடிக்கு பரிசளித்தார்.

# ரஷ்யாவின் கச்சா எண்ணெய் இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டதா?



ஒரு லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்வது தொடர்பாக ரஷ்யாவுடன் பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி, ரஷ்யாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திற்கு முதல்கட்டமாக 45 ஆயிரம் டன் எண்ணெய் சமீபத்தில் வந்தடைந்துள்ளது.

கச்சா எண்ணெய்க்கான பணத்தை சீன கரன்சியின் மதிப்பில் ரஷ்யாவுக்கு பாகிஸ்தான் செலுத்துகிறது. எண்ணெய்யை குறைந்த விலையில் பெறுவதாக பாகிஸ்தான் கூறிவரும் நிலையில், கச்சா எண்ணெய் விற்பனையில் பாகிஸ்தானுக்கு சிறப்பு சலுகை எதுவும் அளிக்கப்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஆனால், ரஷ்யாவிடம் இருந்து பாகிஸ்தான் குறைந்த விலையில் கச்சா எண்ணெய்யை பெற துவங்கி உள்ளது என்று பாகிஸ்தானின் எரிசக்தி துறை அமைச்சர் குராம் தாஸ்த்கிர் கான் கடந்த மாதம் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

ரஷ்யாவின் கச்சா எண்ணெய் பாகிஸ்தானை அடைந்தபோது, அந்த நாளை 'மாற்றத்திற்கான தினம்' என்று அந்நாட்டின் பிரதமர் ஷாபாஸ் ஷெரிப் வர்ணித்திருந்தார்.

பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இந்த நகர்வு குறித்து அவர் மேலும் கூறியபோது, "ரஷ்யாவில் இருந்து குறைந்த விலையில் பெறப்படும் கச்சா எண்ணெய் கராச்சி துறைமுகத்தை அடைந்துள்ளது. மாற்றத்திற்கான இன்றைய நாளில், பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சி மற்றும் எரிசக்தி பாதுகாப்பை கருத்தில் கொண்டு, ரஷ்யாவுடனான இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது" என்று ஷாபாஸ் ஷெரிப் பெருமிதத்துடன் கூறியிருந்தார்.

அதே நேரம், ரஷ்யாவிடம் இருந்து அண்மையில் பெறப்பட்ட கச்சா எண்ணெய், இந்தியாவில் சுத்திகரிக்கப்பட்டு, ஐக்கிய அரபு அமீரகம் வழியாக பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டதாக பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

**முதல் கப்பல் பாகிஸ்தான் வந்தடைந்தது எப்போது?**

ரஷ்யா - உக்ரேன் இடையே நடைபெற்றுவரும் போரின் விளைவாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா உடனான கச்சா எண்ணெய் வர்த்தகத்தை நிறுத்திக் கொண்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வருகிறது.

ரஷ்யா - உக்ரேன் இடையேயான போர்க் காலகட்டத்தில், ரஷ்யாவுடனான இந்தியாவின் எண்ணெய் வர்த்தகம் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ளதை, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தொடர்ந்து சுட்டிக்காட்டி கொண்டிருந்தார்.

இதையடுத்து, ரஷ்யாவிடம் இருந்து ஒரு லட்சம் மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தை பாகிஸ்தான் கடந்த ஏப்ரல் மாதம் மேற்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, எண்ணெய்யை ஏற்றிக் கொண்டு, ரஷ்யாவின் முதல் சரக்கு கப்பல் ஜூன் 11 ஆம் தேதி பாகிஸ்தான் வந்தடைந்தது.

**ரஷ்யா - பாகிஸ்தான் நட்புறவு**

ரஷ்யாவின் சரக்கு கப்பல் பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை வந்தடைந்திருப்பது வெறும் வர்த்தக கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், பல்வேறு கோணங்களிலும் பார்க்கப்படுகிறது.


தற்போது நடைபெற்றுவரும் உக்ரேன் போர் காரணமாக, ரஷ்யா- இந்தியா உடனான நட்புறவில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்த நிலையில் பாகிஸ்தான் உடனான உறவை ரஷ்யா மேம்படுத்தி கொண்டுள்ளது.

அத்துடன், உலகின் தென்பகுதியை சேர்ந்த நாடுகள், மேற்கத்திய நாடுகள் மற்றும் ரஷ்யா இருதரப்பிலும் உறவை பேண முயற்சிக்கின்றன.

ஆனால், அமெரிக்கா - ரஷ்யா இடையே பனிப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், பாகிஸ்தான் அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தது. அதன் காரணமாக, பாகிஸ்தானுக்கும் -ரஷ்யாவுக்கும் இடையேயான உறவு நல்ல நிலையில் இருந்ததில்லை என்பதுதான் வரலாறு.

ஆனால், இந்த வரலாற்றை மாற்றி எழுதும் விதமாக, கடந்த ஆண்டு பிப்ரவரியில் ரஷ்யா, உக்ரேன் மீது போர் தொடுக்கும் அறிவிப்பை வெளியிட்டபோது, பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் இம்ரான் கான், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை மாஸ்கோவில் சந்தித்துப் பேசினார்.

பாகிஸ்தான் இதுநாள்வரை சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து தான் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வருகிறது. ஆனால் நாட்டின் மொத்த கச்சா எண்ணெய் தேவையில் மூன்றில் ஒரு பங்கை ரஷ்யாவிடம் இருந்து பெற விரும்புகிறது என்று பாகிஸ்தான் பெட்ரோலியத் துறை அமைச்சர் அண்மையில் கூறியிருந்தார்.



ரஷ்யா - பாகிஸ்தான் இருதரப்பு உறவு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதை, 'நீண்டகாலம் வாழும் நட்பு' என்று அண்மையில் உருது மொழியில் வர்ணித்திருந்தார் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ்.

அத்துடன் உக்ரேன் உடனான போருக்குப் பின், சீனா- ரஷ்யா இடையேயான நட்புறவும், பாதுகாப்பு ஒத்துழைப்பும் அதிகரித்துள்ளது. ரஷ்யா சீனாவை அதிகம் சார்ந்திருப்பதால் இந்தியா - ரஷ்யா உறவு பாதிப்படைகிறது.

**பாகிஸ்தான் முன்னுள்ள சவால்கள்**

பாகிஸ்தான் உடனான நட்புறவை ரஷ்யா அதிகரித்து வருவது சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. எனினும், ரஷ்யாவிடம் இருந்து நீண்ட காலத்திற்கு கச்சா எண்ணெய்யை பாகிஸ்தான் வாங்க முடியாது என்றே தெரிகிறது. பொருளாதார பிரச்னைகளில் பாகிஸ்தான் சிக்கி தவித்து வருவதுடன், கச்சா எண்ணெய்யை சுத்திகரிப்பதற்கான வசதியும் அங்கு இல்லை என்பதே இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகிறது.

சர்வதேச நிதி நிறுவனங்களில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில், அவற்றிடம் இருந்து பொருளாதார உதவிகளை பெற அமெரிக்காவின் ஆதரவு பாகிஸ்தானுக்கு அவசியம். எனவே, தன்னுடனான எண்ணெய் வர்த்தகத்தை நீண்ட காலத்திற்கு தொடர பாகிஸ்தான் விரும்பாது என்பதே ரஷ்யாவின் புரிதலாகவும் உள்ளது.

ரஷ்யா - உக்ரேன் இடையேயான போரில் நடுநிலை வகிப்பது போன்ற ஓர் பிம்பத்தை உருவாக்க பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது. ஆனால், உக்ரேனுக்கு பாகிஸ்தான் ஆயுதங்கள் வழங்கி வருவது தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாகி உள்ளன. அத்துடன், ஜி 7 நாடுகள் நிர்ணயித்துள்ள கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான விலை வரம்பிற்கு எதிராக ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய்யை வாங்கும் முடிவை பாகிஸ்தான் எடுக்காது எனவும் தெரிகிறது.

**பாகிஸ்தானுக்கு சிறப்பு சலுகை இல்லை**

கச்சா எண்ணெய் ஏற்றுமதியை தேவைப்பட்டால் குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றுதான் கடந்த மாதம் வரை ரஷ்யா தெரிவித்து வந்தது. ஆனால் அதேசமயம், ரஷ்ய எரிசக்தித் துறை அமைச்சரான நிகோலாய் ஷுல்கினோவ், 'ரஷ்யா 24' எனும் ரஷ்ய தொலைக்காட்சிக்கு அண்மையில் பேட்டி அளித்திருந்தார். அதில், "எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை" என்றும் அவர் கூறியிருந்தார்.



"மொத்த சந்தையில் உயர்ந்துவரும் கச்சா எண்ணெயின் விலை மற்றும் இவ்விலை உயர்வு சில்லறை வர்த்தகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவை குறித்து அரசு ஆலோசனை மேற்கொண்டுள்ளது. இதன்படி, கச்சா எண்ணெய் ஏற்றுமதியை குறைப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. எனினும் கச்சா எண்ணெய் உற்பத்தியை பொறுத்துதான் இந்த வர்த்தகம் இருக்கும்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சர்வதேச பொருளாதார அமைப்பின் கூட்டம், கடந்த வாரம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்றது. அப்போது, ரஷ்ய அமைச்சர் நிகோலாய் ஷுல்கினோவ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "பாகிஸ்தானுக்கு கூடுதல் கச்சா எண்ணெய் வழங்கும் நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொள்ளும்" என்று அவர் தெரிவித்திருந்தார். ரஷ்ய அமைச்சரின் இந்த கருத்து, பாகிஸ்தான் ஊடகங்களில் தலைப்பு செய்தியானது.

அதேசமயம், "கச்சா எண்ணெய் விலையில் பாகிஸ்தானுக்கு சிறப்பு சலுகை எதுவும் அளிக்கப்படவில்லை" என்பதையும் அந்த செய்தியாளர்கள் சந்திப்பில் ரஷ்ய அமைச்சர் ஷுல்கினோவ் தெளிவுப்படுத்தி இருந்தார்.

"பிற நாடுகளுக்கு எந்த விலைக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகின்றதோ அதை விலையில் தான் பாகிஸ்தானுக்கும் விற்கப்படுகிறது. கச்சா எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு, சரக்கு கப்பல் ஒன்று சமீபத்தில் பாகிஸ்தான் சென்றடைந்துள்ளது. விரைவில் மற்றொரு கப்பல் அங்கு செல்ல உள்ளது" என்றும் அவர் கூறியிருந்தார்.

மேலும், இந்தியாவுடனான ரஷ்யாவின் நீண்டகால நட்புறவையும் அந்நாட்டு அமைச்சரான ஷுல்கினோவ் இந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போது மறைமுகமாக குறைந்து மதிப்பிட்டிருந்தார்.

"இந்தியாவை போலவே, பாகிஸ்தானும் ரஷ்யாவின் முக்கியமான நட்பு நாடு என்று நாங்கள் நம்புகிறோம்" என்று அவர் கூறியிருந்தார்.

**இந்தியாவில் சுத்திகரிக்கப்பட்ட கச்சா எண்ணெய் பாகிஸ்தானுக்கு சென்றதா?**

இதனிடையே, ரஷ்யாவில் இருந்து பாகிஸ்தானுக்கு அண்மையில் அனுப்பப்பட்ட கச்சா எண்ணெய், இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள ஓர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, பின்னர் அங்கு அனுப்பப்பட்டதாக இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நேரடி வர்த்தகத்திற்கு தடை இருந்து வருவதால், குஜராத்தில் சுத்திகரிக்கப்பட்ட கச்சா எண்ணெய், இந்தியாவில் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் வழியாக பாகிஸ்தானின் கராச்சிக்கு கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை சென்றடைந்தது என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)





# ரஷ்யாவின் கச்சா எண்ணெய்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் உடனான எண்ணெய் வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, அந்நாட்டின் மீது இந்தியா கோபம் கொள் ளக் கூடாது என்பதை உறுதி செய்யும் நோக்கில், ரஷ்யா இப்படியொரு ஏற்பாட்டை செய்திருந்ததாக நம்பப்படு கிறது.

இந்த நிலையில், கப்பல் முதலீட்டாளரும், ஆய்வாளருமான எட் பின்லே ரிச்சர்ட்சன், ரஷ்யாவில் இருந்து பாகிஸ்தானுக்கு கச்சா எண்ணெய் சென்றடைந்தது குறித்த கப்பலின் பயணப் பாதையை குறிக்கும் வரைப டத்தை தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அத்துடன், “சரக்கு கப்பல் இந்தியாவில் இருந்து நேரடி யாக பாகிஸ்தானுக்கு வருவதை அந்நாடு அனுமதிக்காது. எனவே, ரஷ்யா அனுப்பிய எண்ணெய், ஐக்கிய அரபு அமீரகம் வழியாக பாகிஸ்தான் சென்றடைந்துள்ளது. இந்த வர்த்தக பயணம் மேற்கொண்ட சரக்கு கப்பல், ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இயங்கிவரும் ஓர் நிறுவனத்திற்கு சொந்தமானது” என்று ரிச்சர்ட்சன் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், ரஷ்யாவில் இருந்து பாகிஸ்தானுக்கு சென்ற டைந்த கச்சா எண்ணெய் தாங்கிய சரக்கு கப்பலின் இந்த பயணப் பாதை குறித்தும் அவர் கேள்வி எழுப்பியிருந் தார். சரக்குக் கப்பலின் இந்த பயணப் பாதை குறித்து ரஷ்யா மகிழுமா? இந்தப் பயணத்தின் விளைவாக கச்சா எண்ணெய் விலை உயருமா அல்லது குறையுமா? என்று பல்வேறு கேள்விகளை ரிச்சர்ட்சன் எழுப்பி உள்ளார்.

**பயனடைந்த இடைத்தரகர்**

ரஷ்யா- பாகிஸ்தான் இடையேயான கச்சா எண்ணெய் ஒப்பந்தத்தை செயல்படுத்தி உள்ள விதத்தால் இந்தியா விற்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே இருக்கும் ஓர் இடைத்தரகர் பயனடைந்துள்ளார் என்று பாகிஸ்தான் பத்திரிகையாளர் வகாஸ் பகிரங்கமாக குற்றம் சாட்டி உள்ளார்.

‘ஒரு பேரல் கச்சா எண்ணெய்யை 52 டாலர்களுக்கு ரஷ்யா இந்தியாவுக்கு விற்றது. அதன்பின், இந்தியாவுக் கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே இருக்கும் ஓர் இடைத்தரகர் அதனை ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்கி விற்றார். இறுதியாக ஒரு பேரல் கச்சா எண்ணெய் 69 டாலர் என்ற கணக்கில் பாகிஸ்தானுக்கு விற்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு பேரலுக்கு 17 டாலர்கள் அளவுக்கு இந்தியாவைச் சேர்ந்த அந்த வியாபாரி லாபம் பார்த்துள்ளார். இந்த வர்த்தகத்தில் பாகிஸ்தானுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியுள்ளது” என்று வகாஸ் கூறியுள்ளார்.

அதேசமயம், ரஷ்யாவுடனான எண்ணெய் ஒப்பந்தம் தாமதமாக செயல்படுத்தப்பட்டுள்ளது குறித்து பாகிஸ்தானின் பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமே பாகிஸ்தான் செயல்படுத்தி இருக்க வேண்டும். அப்போது தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய்யை ரஷ்யா ஏற்றுமதி செய்து வந்ததால், அதன் மூலம் பாகிஸ்தா னுக்கு பொருளாதார ரீதியாக பலன் கிடைத்திருக்கும். அந்நிய செலாவணியையும் சேமித்திருக்கலாம் என்று பாகிஸ்தானின் எதிர்க்கட்சியான தெஹ்ரீக் -இ- இன்சாஃப் (பி.டி.ஐ) உடன் தொடர்புடைய ஹமத் சவுத்ரி என்பவர், ரஷ்யா உடனான பாகிஸ்தானின் இந்த ஒப்பந் தத்தை விமர்சித்துள்ளார்.

**ரஷ்யா -பாகிஸ்தானுக்கு என்ன பலன்?**

உக்ரேன் மீதான போரின் விளைவாக, ரஷ்யாவுடனான கச்சா எண்ணெய் வர்த்தகத்துக்கு அமெரிக்கா மற்றும் மேலை நாடுகள் தடைவிதித்துள்ளன. இதன் காரணமாக, தனது கச்சா எண்ணெய் வர்த்தகத்திற்கு, ரஷ்யா புதிய சந்தையை தேடி கொண்டுள்ளது.

இத்தகைய சூழலில், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வர்த்தகத்திற்கு தான் பெரிய சந்தை என்பதை நிரூபிக்க பாகிஸ்தானால் முடியும். மற்றொரு புறம், கடும் பொருளாதார நெருக்கடியை பாகிஸ்தான் சந்தித்து வரும் நிலையில், எண்ணெய் வர்க்கத்தில் புதிய வாய்ப்பை ரஷ்யா அளித்துள்ளது.

எரிபொருள் தேவையை பூர்த்தி செய்து கொள்ள, பாகிஸ்தான் கச்சா எண்ணெய் இறக்குமதியை பெரிதும் நம்பியுள்ளது. அத்துடன் அந்நாட்டின் அன்னிய செலா வணி கையிருப்பின் பெரும்பங்கு கச்சா எண்ணெய் வாங் குவதற்கே செலவிடப்படுகிறது.

இத்தகைய நெருக்கடியான சூழலில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவது பொருளாதார ரீதியாக சாதகமாக இருக்கும் என்று பாகிஸ்தான் நம்புகிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 6.5 பில்லியன் டாலர்கள் கடன் பெறும் முயற்சியிலும் பாகிஸ்தான் அரசு இறங்கி உள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் மீள்குடியேற்றம் நிறைவு

அம்பாறை, ஜூன் 24

அம்பாறை மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நிலகண்ணிவெடிகள் இல்லாத பிரதேசமாக மாவட்டத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் மக்களை கிராமங்களில் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இராணுவத்தின் மனிதாபிமான நில கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியவற்றின் ஆதரவுடன் நிலகண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. அம்பாறை மாவட்டம் யுத்தத்தின்போது பாரிய சேதங்களுக்கு உள்ளான மாவட்டமாகும். அந்த மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் தங்க வேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு, காஞ்சிரம்குடா, சாகாமம் ஆகிய நான்கு கிராமங்களிலும் 343 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 72 வீடுகள் கட்டப்பட உள்ளன.

அந்த பகுதியிலுள்ள 71 பயனாளி குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டுள்ளதுடன், 93 பொதுக்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. யானைகளிடமிருந்து கிராமங்களை பாதுகாப்பதற்காக 38 கிலோமீற்றர் நீளமான யானை வேலியும் தயார் செய்யப்பட்டுள்ளது - என்றார்.

(அ)

# சமுர்த்தி நலன் பெறும் பயனாளிகளின் பிள்ளைகளுக்கு கல்வி புலமைப்பரிசில்

அக்கரைப்பற்று, ஜூன் 24

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி நலன்பெறும் பயனாளிகளின் க.பொ.த உயர்தரம் கற்க தகுதி பெற்ற மாணவர்களுக்கு “சமுர்த்தி சிப்தொர கல்விப் புலமைப் பரிசில் “ வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத் தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.ஜே. எம். நிஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவை வழங்கினார்.

(அ)






# பாத யாத்திரை சென்றவர் பாம்பு தீண்டி உயிரிழப்பு!

## குமுக்கனில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 24

**கதிர்காமத்துக்கு காட்டுவழியாக பாத யாத்திரை சென்ற ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் குமுக்கன் காளியம்பாள் ஆலயப் பகுதியில் பாம்பு தீண்டியதில் மரணமடைந்தார்.**

இவரை பாம்பு தீண்டியதும் அங்கிருந்த சுகாதாரப் பிரிவினர் அம்புலன்ஸில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர் உயிரிழந்தார் என திருக் கோவில் பொலிஸார் தெரிவித் தனர்.

தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய லிங்கசாமி கேதீஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த யாத்திரீகர் இரு தினங்களுக்கு முன்னர் தமது நேர்த்திக்கடனை முடிப்பதற்காக உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரையை ஆரம்பித்து சென்று கொண்டிருந்த நிலையில் சம்பவதினமான நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் குமுக்கன் ஆலய பகுதியில் காலில் பாம்பு ஒன்று தீண்டியதையடுத்து மயக்கமடைந்துள்ளார்.

இதனையடுத்து அந்த பகுதியில் முகாமிட்டு மருத்துவ சேவையில் ஈடுபட்டுவரும் மருத்துவர்கள் அவரை உடனடியாக அம்புலன்ஸ் வண்டியில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு உயிரிழந்த நிலையில் வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் கதிர்காம காட்டுவழி பாதை யாத்திரையில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# புலமைப் பரிசில் வழிகாட்டி வழங்கல்



திருமலை, ஜூன் 24

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு குச்சவெளி விவேகாநந்தா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொன்றும் 1,680 ரூபாய் பெறுமதியான ஞானோதயம் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வழங்கப் பட்டது.

(அ)

# கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு 500 உலர் உணவுப்பொதி வழங்கல்



காரைதீவு, ஜூன் 24

மக்கள் வங்கியின் இந்து மாமன்றத்தினர் வருடாந்தம் நடத்திவரும் கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கான உலருணவுப் பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு இம்முறையும் உகந்தையில் நடைபெற்றது.

அம்பாறை பிராந்திய முகாமையாளர் திருமதி எம்.எம்.ஏ. அமரசிறி தலைமையில் உணவுப் பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை உதவி பொது முகாமையாளர் டபிள்யூ.முத்துகல, மட்டக்களப்பு உதவி பொதுமுகாமையாளர் என். அருட்செல்வம், அம்பாறை பிராந்திய உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

பாதயாத்திரீகர்கள் 500 பேருக்கு மக்கள் வங்கி இலச்சினை பொறித்த 500 உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

குமண தேசிய சரணாலய முன்றலில் வைத்து மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்களால் இப் பொதிகள் வழங்கப் பட்டன.

(அ)



காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மான் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் பக்தர்கள் தீ மிதிப்பதைக் காணலாம். (அ)

# கல்முனை நகர லயன்ஸ் கழக பதவியேற்பு விழா

நிந்தவூர், ஜூன் 24

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது வெள்ளிவிழா வருட (2023 / 2024) புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு விழா வெகுவிமரிசையாக நடைபெறவிருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை கல்முனை கிறீன் பார்க்றிசோட், மண்டபத்தில் இந்த விழா நடைபெறும்.

கழகத்தின் 2023 / 2024 வெள்ளி விழா வருட புதிய நிருவாக சபை பதவியேற்புக்கான இந்த விழாவில், தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

கழகத்தின் புதிய நடப்பாண்டுக்கான (2023 / 2024) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் பொறியியலாளர் எம்.சுதர்சன் செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் ஏ.எல்.எம்.பாயிஸ் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் எம்.பரமேஸ்வரநாதன் ஆகியோருட்பட தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய நிர்வாகிகளுக்கு இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன விழாவில் உத்தியோக பூர்வமாகப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த 25 வருடகாலமாக இன மத பேதங்களுக்கப்பால் தேவைகளுடைய பல்வேறு தரப்பினருக்கும் கல்முனை நகர லயன்ஸ் கழகம் அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக சுனாமி அனர்த்தம் போன்ற பல சந்தரப்பங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள், இடர்களின் போதெல்லாம் பாமர மக்களை நாடிச் சென்று உதவிகள், நிவாரணங்கள் வழங்கி மக்களை ஆற்றுப்படுத்திய முதன்மைப் பெருமையும் இக்கழகத்திற்கு உண்டு.

தன்னலம் கருதாத, மக்கள் சேவையை இலட்சியமாகக் கொண்ட நிர்வாகிகளையும், உறுப்பினர்களையும் கொண்ட இக் கழகம் 25 ஆவது வெள்ளி விழா வருடத்தில் மேலும் சிறப்புற்று திகழ மக்கள் அமைப்புக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றன.

(அ-06)

# வாகரை பிரதேசத்தில் ஆடு வளர்ப்புத் திட்டம்!

மட்டக்கலப்பு, ஜூன் 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு இணங்க விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவினால் கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய ஆடு வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் கிராமங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆடுகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஜி. அருணனின் வழிகாட்டலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது 1.125 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் பவாக்கரையிலுள்ள கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட



பயனாளிகளில் பெண் தலைமை தாங்கும் குறைந்த வருமானமுடைய 15 குடும்பங்களுக்கு 50 ஆடுகள் வழங்கப்பட்டன.

உதவிப்பிரதேச செயலாளர் ஜி. பிரணவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதி, பிரதேச உதவித்திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு




# வெடித்துச் சிதறியது நீர்மூழ்கி! அதில் பயணித்த ஐவரும் பலி!!

## உடல்களை மீட்பது சாத்தியமில்லை துயரத்தில் முடிந்த டைட்டானிக் பயணம்

நியூயோர்க், ஜுன் 24

**"டைட்டான்" நீர்மூழ்கிக் கப்பல் சமுத்திரத்தின் ஆழத்தில் நீரின் அழுத்தம் காரணமாக வெடித்துச் சிதறியுள்ளது. அதில் பயணம் செய்த ஐவரும் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள் ளனர். கடலடியில் மீட்கப்பட்ட சிதைந்த பாகங்கள் நீர்மூழ்கியினுடையதே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.**



"பேரழிவை ஏற்படுத்தும் வெடிப்பு" நிகழ்ந்திருப்பதை மீட்கப்பட்ட பாகங்கள் காட்டு கின்றன. ஐவரது உடல்களையும் மீட்க முடியுமா என்பதை என் னால் தீர்க்கமாகக் கூற முடியாது.

ஆயினும் தேடுதல் பணிகள் இன்னும் 24 மணிநேரத்துக்கு நீடிக்கும். நீர்மூழ்கி வெளி உல கத் தொடர்பை இழந்து காணா மற்போனமைக்கு என்ன கார ணம் என்பது தெரியாது. அந்த மர்மம் தொடர்பான விசார ணைகள் தொடர்ந்து இடம்பெ றும்.

-அமெரிக்கக் கரையோரக் காவல் படையின் ரியர் அட்மி ரல் மொஹர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற் கண்ட தகவல்களை அறிவித்தார்.

உயிரிழந்தவர்களது உறவுக ளுக்குக் கரையோரக் காவல் படை தனது ஆழ்ந்த இரங்கல்க ளைத் தெரிவித்துக்கொள்கிறது - எனவும் அவர் கூறினார்.

கனடாவின் நியூபவுண்ட் லான்ட்டுக்குச் சற்றுத் தொலை வில் அத்திலாந்திக் சமுத்திரத் தின் ஆழத்தில் கிடக்கின்ற புகழ் பெற்ற டைட்டானிக் கப்பலின் சிதைவுகளுக்குப் பயணித்த டைட்டான் என்ற சிறிய உல்லாச நீர்மூழ்கி கடந்த ஞாயிற்றுக்கி ழமை முதல் நீருக்கடியில் காணா மற்போனமை தெரிந்ததே. அதன் சிதைவுகளை சர்வதேச மீட்புப் படைகள் நேற்று முன் தினம் கண்டுபிடித்திருந்தன.

பயணிகள் ஐவரும் உயிரி ழந்ததை நீர்மூழ்கியின் சொந்த நிறுவனமாகிய 'ஓசியன்கேற்' உத்தியோகபூர்வ அறிக்கை ஒன் றில் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, கடலில் பல்லா யிரக்கணக்கான அடி ஆழத்தில் நீர்மூழ்கிக்கு என்ன நடந்தது என்பது இவ்வாறு மதிப்பிடப் பட்டாலும் இன்னும் பல கேள் விகளுக்கு விடைகிடைக்கப் போவதில்லை என்று நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

(அ)

# ஷேன் வோர்னின் மரணத்துக்கு கொரோனா ஊசியே காரணம்?



லண்டன், ஜுன் 24

கிரிக்கெட் விளையாட்டின் ஜாம்பவான்களில் ஒருவரான ஷேன் வோர்னின் மரணத்துக் கான காரணம் என்ன என்பதை மருத்துவர்கள் பகிர்ந்துள்ளனர்.

வோர்னின், உடற்கூராய்வின் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளை அவர்கள் இதில் தெரிவித்துள்ளனர்.

இதனை இந்திய வம்சாவளி யைச் சேர்ந்த பிரிட்டன் நாட் டில் வசித்து வரும் இதயவியல் மருத்துவர் அசீம் மல்ஹோத்ரா மற்றும் ஆஸ்திரேலிய மருத்துவ வல்லுநர்கள் சங்கத்தின் தலைவ ரும், மருத்துவருமான கிறிஸ் நீல் ஆகியோர் இணைந்து கண்டறிந் துள்ளனர்.

உடற்கூராய்வு முடிவுகளின் படி வோர்னுக்கு இதய நோய் இருந்ததாக அவர்கள் தெரிவித் துள்ளனர்.

கடந்த ஆண்டு மார்ச் 4ஆம் திகதி தாய்லாந்துக்கு சுற்றுப்ப யணம் மேற்கொண்ட போது 52 வயதான ஷேன் வோர்ன் மரணமடைந்தார். அவுஸ்திரே லிய கிரிக்கெட் அணிக்காக 1992 முதல் 2007 வரையில் சர்வதேச கிரிக்கெட் களத்தில் வோர்ன் விளையாடினார். 145 டெஸ்ட் மற்றும் 194 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவர் விளையாடி உள்ளார். மொத்த மாக 1001 விக்கெட்டுகளை சர்வதேச கிரிக்கெட்டில் அவர் கைப்பற்றி உள்ளார்.

"சர்வதேச அளவில் விளை யாடிய வீரரான ஷேன் வோர்ன், மாரடைப்பால் மரணம் அடைந் தது அசாதாரணமானது. ஆனா லும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அவர் கடைப்பிடிக்க வில்லை. அது நாம் அனைவ ரும் அறிந்ததே. அதீத உடல் எடை, புகைப்பழக்கத்தையும் அவர் கொண்டிருந்தார். அவரது இதயத்தின் தமனிகளில் லேசான படிமங்கள் இருந்திருக்க வாய்ப்புள்ளது. நாங்கள் நோயா ளிகளிடம் இது மாதிரியான பாதிப்புகளை பார்த்துள்ளோம். ஆனால், வோர்ன் விடயத்தில் அவர் கொரோனா தடுப்பூசியை இரண்டு டோஸ் செலுத்திக் கொண்ட பிறகு தமனியில் பாதிப்பின் நிலை தீவிரமடைந் துள்ளது.

இந்த எம்.ஆர்.என்.ஏ தடுப் பூசிகள் அவுஸ்திரேலியா மற்றும் உலக அளவில் உயிரிழப்பு பாதிப் புகளை ஏற்படுத்தி வருகிறது. அதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை. தடுப்பூசி சார்ந்த உயி ரிழப்புகள் குறித்த விவகாரம் விசாரணை நிலையில் உள்ளது. அதனால் இதன் பயன்பாட்டை உலகளவில் நிறுத்த வேண்டும்" என மருத்துவர்கள் அசீம் மல் ஹோத்ரா மற்றும் கிறிஸ் நீல் தெரிவித்துள்ளனர். பெரும்பா லான இதயவியல் மருத்துவர் கள் இந்த கருத்தை முன்வைத் துள்ளதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

(அ)

# கெர்சன்- கிரிமியாவை இணைக்கும் பாலத்தை தகர்க்க உக்ரைன் முயற்சி

கீவ், ஜுன் 24



உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப் பாட்டில் உள்ள தெற்கு கெர்சன் பகுதியையும், கிரிமியாவையும் இணைக்கும் சோன்ஹார் சாலைப் பாலத்தை உக்ரைனிய ஏவுகணை கள் தாக்கியுள்ளன.

2014 இல் உக்ரைனிலிருந்து ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட கிரிமியாவிற்கும்-உக்ரைனின் பிர தான நிலப்பகுதிக்கும் இடையே உள்ள ஒரு சில இணைப்புகளில்," கிரிமியாவின் வாயில்" என்று அழைக்கப்படும் சோங்கர் பாலமும் ஒன்றாகும்.

இதனால், போக்குவரத்தை வேறு பாதையில் திருப்பிவிட வேண் டிய கட்டாயம் ஏற்பட்டது என்று ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கடந்த வியாழக்கி ழமை தெரிவித்தனர்.

கிரிமியாவுக்கும் உக்ரைனின் மற்றப் பகுதிகளுக்கும் இடையில் செல்ல ரஷ்ய இராணுவம் பயன்படுத்தும் பாதை இது.

கிரிமியாவை மீட்டெடுக்க விரும்புவதாகவும், அனைத்து ரஷ்யப் படைகளையும் அதன் எல்லையில் இருந்து விரட்ட விரும்புவதாக வும் உக்ரைன் கூறுகிறது.

கெர்சன் பகுதிக்கான ஆளும் குழுவில் உள்ள உக்ரேனிய அதிகாரி யூரி சோபோலெவ்ஸ்கி, "ஆக்கிரமிப்பாளர்களின் இராணுவத் தளபா டங்களுக்கு இது ஒரு அடி" என்றார்.

பாலத்தின் மீது உக்ரைன் படைகளால் நான்கு ஏவுகணைகள் வீசப் பட்டதாக ரஷ்ய புலனாய்வாளர்கள் கூறியதாக றியா செய்தி நிறுவ னம் தெரிவித்துள்ளது.

இராணுவப் புலனாய்வாளர்களின் செய்தித் தொடர்பாளர் ஒரு வரை மேற்கோள் காட்டி, ஏவுகணைகளில் ஒன்றின் எச்சங்களில் காணப்படும் அடையாளங்கள் இது பிரான்சில் தயாரிக்கப்பட்டதாக கூறியது.

ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட கெர்சனின் ஆளுநரான விளாடிமிர் சால்டோ, உக்ரைனுக்கு பிரிட்டிஷ் வழங்கிய கப்பல் ஏவுகணைகளை தாக்குதலுக்கு பயன்படுத்தியிருக்கலாம் என்றார்.

"உக்ரைன் பயங்கரவாதிகள் கெர்சன் குடியிருப்பாளர்களை அச்சு றுத்தவும், மக்களிடையே பீதியை விதைக்கவும் விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் வெற்றிபெறமாட்டார்கள். பாலங்களை எவ்வாறு விரைவாக சரி செய்வது என்பது எங்களுக்குத் தெரியும். வாகனப் பாதை மிக விரைவில் எதிர்காலத்தில் மீட்டமைக்கப்படும், "என்று அவர் கூறினார்.

(அ)

# உருகுவேயில் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை!

## அவசர நிலை பிரகடனம்

மொண்டிவீடியோ, ஜுன் 24

உருகுவேயில் பல மாதங்க ளாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக தண்ணீர் தட்டுப் பாடு அதிகரித்து வருவதால், அங்கு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட் டுள்ளது.

தற்போதைய தண்ணீர் நெருக் கடியைத் தணிக்க "சட்ட செயல் முறைகளை விரைவாகவும் எளி தாகவும்" செயற்படுத்தவே அவ சரகால நிலையை அறிவித்ததாக உருகுவே ஜனாதிபதி குறிப்பிட் டுள்ளார்.

சான் ஜோஸ் ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் பணிகள் தொடங்கியிருப்பதாக வும் அப்பணி 30 நாட்களில் சாத்தியப்படும் எனவும் ஜனாதி பதி அறிவித்துள்ளார்.

தலைநகரில் உள்ள 21,000 குடும்பங்களுக்கு இலவசமாக 2 லீற்றர் தண்ணீரை அரசு வழங் கும் என்றும், குடிதண்ணீர் போத்தல்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும் உரு குவே அரசு அறிவித்துள்ளது.

அடுத்த ஒரு சில வாரங்க ளுக்கு நாட்டில் மழைக்கான அறிகுறி எதுவும் இல்லாத கார ணத்தாலும், தற்போதைய கடு மையான தண்ணீர் பற்றாக்குறை யாலும் அரசு இந்த முடிவை



எடுத்திருப்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

அதிக வெப்பநிலை காரண மாக உருகுவேயில் கடந்த 7 மாதங்களாக மிக மோசமான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட் டுள்ள நிலையில், நாட்டின் 60 சதவீத நீர் ஆதாரமாக விளங்கிய அணைக்கட்டுகளிலும் தண்ணீர் வறண்டுபோனதால், அங்கு அவ சரநிலை பிறப்பிக்கப்பட்டுள் ளது.

கடந்த சில மாதங்களில் அங்கு போத்தல் தண்ணீர் விற் பனை மூன்று மடங்கு அதிகரித் துள்ளதுடன், தலைநகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விலை ஐந்து மடங்கு அதிகரித் துள்ளது.

(அ)

ஈழநாடு






## உலகக் கிண்ண தகுதி சுற்று; மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

ஹராரே, ஜூன் 24

நேபாளம் அணியை 101 ஓட்டங்களால் வெற்றி கொண்டு இரண்டாவது வெற்றியைப் பெற்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

2023ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் வரும் ஒக்ரோபர் முதல் நடைபெறவுள்ளது.

இதில், 8 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டன. எஞ்சிய 2 இடங்களுக்கான அணிகள், தகுதிச் சுற்று மூலம் தேர்வு செய்யப்படும்.

இந்நிலையில் தகுதிச் சுற்று போட்டிகள் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகின்றன.

சிம்பாவேயின் ஹராரே விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள்-நேபாளம் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நேபாளம் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 339 ஓட்டங்களை பெற்றது.

ஷாய் ஹோப் 132, நிக்கோலஸ் பூரான் 115 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் லலித் ராஜ்வன்ஷி 52 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்து ஆடிய நேபாளம் 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டை இழந்து 238 ஓட்டங்களை பெற்றது. ஆரிப் ஷேக் 63 ஓட்டங்களை பெற்றார். மேற்கிந்தியத்தீவுகள் 101 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. ஆட்டநாயகனாக ஷாய் ஹோப் தெரிவானார்.

(ஐ)

## உலகக் கிண்ண தகுதி சுற்று நெதர்லாந்து அணி வெற்றி!



ஹராரே, ஜூன் 24

அமெரிக்காவை நெதர்லாந்து அணி 5 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தகுதிச் சுற்றில் மற்றோர் ஆட்டத்தில் ஹராரேயில் அமெரிக்கா-நெதர்லாந்து அணிகள் மோதின.

இதில், நாணயசுழற்சியில் வென்ற நெதர்லாந்து முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கா 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்களை பெற்றது. ஷயான் ஜஹாங்கிர் 71 ஓட்டங்களை பெற்றார்.

இலக்கை விரட்டிய நெதர்லாந்து 43.2 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 214 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

ஸ்கொட் எட்வர்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 67ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்.

(ஐ)

## கொன்டாவெய்ட் திடீர் ஓய்வு அறிவிப்பு

லண்டன், ஜூன் 24

எஸ்தோனியா நாட்டின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை அனெட் கொன்டாவெய்ட் தற்போது தரவரிசையில் 79ஆவது இடத்தில் இருக்கிறார். அதிகபட்சமாக 2ஆவது இடம் வரை முன்னேறியுள்ள அவர் இதுவரை 6 சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் காலிறுதியை எட்டியது, கிராண்ட்ஸ்லாமில் அவரின் சிறந்த செயல்பாடாகும். இந்த நிலையில் 27 வயதான கொன்டாவெய்ட் அடுத்த மாதம் லண்டனில் நடக்கும் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டியுடன் சர்வதேச டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

முதுகுதண்டுவட பாதிப்பால் அடிக்கடி அவதிப்படும் அவர் மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பேரில் குறுகிய காலத்திலேயே டென்னிஸூக்கு ஓய்வு கொடுக்கிறார்.

(ஐ)






## ஜேர்மன் ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா அதிர்ச்சி தோல்வி!

பெர்லின், ஜூன் 23

ஜேர்மன் ஓப்பன் பெண்கள் ரென்னிஸ் போட்டி பெர்லின் நகரில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 2ஆம் நிலை வீராங்கனை சபலென்கா (பெலாரஸ்) அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

அவரை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் குடெர்மெடோவா தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார். நேற்று நடந்த காலிறுதி போட்டிகள் நடக்கின்றன.

அலெக்சாண்ட்ரோவா (ரஷ்யா)-குடெர்மெடோவா (ரஷ்யா), கார்சியா (பிரான்ஸ் )- குவிட்டோவா (செக் குடியரசு), சக்காரி (கிரீஸ்)-வோண்ட்ரூசோவா (செக் குடியரசு), எலினா அவனேசியன் (ரஷ்யா)-டோனா வெக்கிச் (குரேஷியா) ஆகியோர் மோதுகிறார்கள். (ஐ)

# மகளிர் ஆஷஷ் டெஸ்ட் ஆஸி. 213 ஓட்டங்கள் சேர்ப்பு

நாட்டிங்ஹாம், ஜூன் 24

மகளிர் ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிராக முதல் இன்னிங்ஸை ஆடிவரும் அவுஸ்திரேலியா 3 விக்கெட்கள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் சேர்த்திருக்கிறது.

முதல் நாளான வியாழக்கிழமை 51.3 ஓவர்கள் முடிந்திருந்த நிலையில், மழையால் தடைப்பட்ட ஆட்டம், மைதானத்தின் ஈரத் தன்மை காரணமாக மீண்டும் தொடர்வது தாமதமானது.

ஆடவர் ஆஷஷ் தொடர் 5 போட்டிகளுடன் நடைபெறும் நிலையில், மகளிர் ஆஷஷ் கிரிக்கெட் ஒரு போட்டியாக மட்டும் நடைபெறுகிறது. இந்த டெஸ்ட் நாட்டிங்ஹாமில் வியாழக்கிழமை தொடங்கியது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

அணியின் இன்னிங்ஸை பெத் மூனி - போப் லிட்ச் பீல்ட் கூட்டணி தொடங்கியது. இதில் லிட்ச் பீல்ட் 4 பௌண்ட்ரிகள் உள்பட 23 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, பெத் மூனி 4 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

இதையடுத்து 3-ஆவது விக்கெட்டுக்கு இணைந்த எலிஸ் பெரி - டாலியா மெக்ராத் பார்ட்னர்ஷிப் 119 ஓட்டங்கள் சேர்த்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

டாலியா 8 பௌண்ட்ரிகள் உள்பட 61 ஓட்டங்களுடன் அரங்கம் திரும்பினார். தொடர்ந்து ஜெஸ் ஜோனசென் களம் புகுந்தார். மழையால் ஆட்டம் தடைப்பட்ட போது எலிஸ் பெரி 82, ஜோனசென் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் கேட் கிராஸ், சோபி எக்லஸ்டன், லௌரென் பைலர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



# அதிக வரி அறவீட்டுக்கு கிளிநொச்சியில் எதிர்ப்பு

## கரைச்சி சந்தை வர்த்தகர்கள் போராட்டம்

**கிளிநொச்சி, ஜூன் 24**

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பொதுச் சந்தை வர்த்தகங்கள் நேற்று வெள்ளிக் கிழமை சந்தை வளாகத்தில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி எதிர்ப் புப் போராட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.**

**மே மாதம் தொடக்கம் அதிகரித்த வரி அறவீடு மேற்கொள்வதற்கு எதிராக இந்த எதிர்ப் புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

இதுவரை காலமும் 1500 ரூபா வரி மற்றும் கழிவகற்றலுக் காக ஒவ்வொரு வியாபாரியிட மும் மாதாந்தம் பெறப்பட்டு வந்த நிலையில் மே மாதம் தொடக்கம் 7500 ரூபா வரியாக வும் 600 ரூபா கழிவகற்றலுக்கும் என 8100 ரூபா அறவிடுவதற்கு கரைச்சி பிரதேச சபை தீர்மா னித்துள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே சந்தை வியாபாரிகள் தங்கள் வியாபார நிலையங்ளை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2021 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையால் விலை மதிப் பீட்டுக்கு கோரிக்கை விடுக்கப் பட்டு விலை மதிப்பீடு செய்யப் பட்டே அதிகரித்த வரி அறவி டப்படுவதாக கரைச்சி பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஒரு வர் தெரிவித்தார்.



இது சட்டரீதியானது என வும் இதனை மேற்கொள்ளாது விடின் கணக்காய்வு விசாரணை களுக்கு உள்ளாகவேண்டிய நிலை உருவாகும் எனவும் அவர் கூறினார்.

போராட்டத்தில் ஈடுபட்ட சந்தை வர்த்தகர்கள் சார்பாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை சந்தித்து தங்களின் கோரிக்கையை முன்வைத்தனர். (அ)

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஊழியர் நலன்புரி சங்கம் இரத்ததானம்



யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்டத்தில் தற் போது ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய் யும் வகையில் பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத் தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து இந்த நிகழ்வு முன் னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செய லக ஊழியர் நலன்புரிச் சங்கத் தின் தலைவரும் கிராம அலுவ லருமாகிய அரியகுமார் ரதீஸ்க ரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக் காளர் உட்பட பிரதேச செயலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் குருதிக்கொடை நிகழ்வில் பிரதேச செயலக ஊழியர்கள் 19 பேர் குருதி வழங் கினர். (அ)

# தடம் புரண்டது சரக்கு ரயில்!



கொழும்பு, ஜூன் 24

கண்டியிலிருந்து பதுளை நோக்கி நேற்றுக் காலை பயணித்த சரக்கு ரயில் தலவாக்கலை-வட் டக்கொடை ரயில் நிலையத் துக்கு இடைப்பட்ட பகுதியில் தடம் புரண்டுள்ளதாக நானு ஓயா ரயில் நிலைய கட்டுப் பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு தடம்புரண்ட சரக்கு ரயிலையும், ரயில் பாதை யையும் சீர் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பது ளையில் இருந்து கொழும்புக்கு காலை செல்லும் பயணிகள் ரயில் சேவை தாமதமாகும் என வும் அந்த அதிகாரி மேலும் கூறி னார். (அ)

# பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் இலவச குடிதண்ணீர் வழங்கல் திட்டம்

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னகர், பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் வீட்டுப் பாவ னையாளர்களுக்கான திட்டத் தின் ஊடான இலவச குடிதண் ணீர் இணைப்பை வழங்குவதற் கான விண்ணப்பங்கள் எதிர்வ ரும் 30 ஆம் திகதி வரை மட் டுமே பெற்றுக்கொள்ளப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகா லமைப்புச் சபையினர் அறிவித் துள்ளனர்.

எனவே 155 ஆம் கட்டை, ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைந் துள்ள தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபையின் அலுவ லகத்தில் குறித்த திகதிக்குள் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து கையளிக்கவேண் டும் எனவும்,

இதற்கான வைப்புப் பணம் 06.07.2023 அன்று அலுவலகத் தில் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்புச் சபையினர் அறி வித்துள்ளனர்.

ஏற்கனவே மூன்று தடவை கள் நடமாடும் சேவைகள் மூலம் இலவச குடிதண்ணீர் விநியோ கத் திட்டத்தின் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக இத்திட் டம் 30ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளமையால் குறித்த திகதிக்கு பின் இத்திட்டத்தால் இலவச நீர் இணைப்பை வழங் குவதற்குரிய சாத்திப்பாடுகள் இல்லை என்பதனையும் பொது மக்களுக்கு அவர்கள் அறிவித் துள்ளனர். (அ)

# குழந்தை பிரசவித்த பெண் சாவு; உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் கெஹலிய உறுதி

கொழும்பு, ஜூன் 24

பேராதனை வைத்தியசாலை யில் சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட்டு குழந்தை பிரசவித்த பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசார ணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும், இந்த மரணத்தில் ஏதேனும் தவறிழைக்கப்பட்டி ருந்தால் அதனுடன் தொடர்பு டையவர்களுக்கு உரிய நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கடந்த வாரம் பேராதனை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிரச வித்த தாயொருவர், தவறான மயக்க மருந்து பயன்படுத்தப் பட்டதால் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்துகளை நான் இறக்கு மதி செய்யவில்லை. எனவே அது தொடர்பான தொழிநுட் பக் காரணிகளை என்னால் விளக்க முடியாது. எனவே தான் விடயத்துடன் தொடர்புடைய வைத்தியர்களை உரிய விளக் கத்தை வழங்குமாறு பணிப்புரை விடுத்திருக்கின்றேன்.

அண்மையில் பேராதனை பண்டாரநாயக்க சிறுவர் வைத் தியசாலையில் பதிவான மரணத் துக்கு குறிப்பிட்டவொரு மயக்க மருந்து காரணமெனக் குறிப்பி டப்பட்டது. ஆனால் குறித்த மருந்து எந்தவொரு சந்தர்ப்பத் திலும் சிறுவர்களுக்கு பயன்ப டுத்தப்படுவதில்லை என விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

எனவே, ஒரு சிலர் குறிப்பி டும் காரணிகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான விடயங்களை அவ தானிக்க முடியாது. பல கோணங் களிலும் விசாரணைகளை முன் னெடுக்கவேண்டியுள்ளது. எனவே பேராதனை வைத்திய சாலையில் பதிவாகியுள்ள மர ணம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

# கொழும்பு பிரபல பாடசாலையின் 10 வயது மாணவி துஷ்பிரயோகம்

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் உள்ள பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் கல்வி கற்கும் பத்து வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய் ததுடன் சிறுமியின் உடலின் சில இடங்களில் சிகரெட்டினால் சூடு வைத்த சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலி ஸார் நீதிமன்றில் அறிவித்துள்ள னர்.

இந்த வருடம் புலமைப் பரி சில் பரீட்சைக்கு தோற்றவுள்ள சிறுமியை கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசா லையில் அனுமதித்து சிகிச்சை அளிக்குமாறு கொழும்பு பிர தான நீதிவான் நீதிமன்றம் உத்த ரவிட்டுள்ளது.

சிறுமி தொடர்பில் வெல்லம் பிட்டி பொலிஸாரால் பெறப் பட்ட சட்ட வைத்திய அறிக்கை கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப் பட்டன. மருத்துவ அறிக்கை ளைக் கருத்தில் கொண்டு, சிறு மியை அவரது தாயின் பராம ரிப்பில் வைத்தியசாலையில் சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட் டது.

பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்ட மாண வியின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டதைக் கண்ட வகுப்பு ஆசிரியர் சிறுமியை வெல்லம் பிட்டி பொலிஸாரிடம் அழைத் துச் சென்றார்.

இதன்படி, சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலை யில் ஆஜர்படுத்தியபோது, சிறுமி எட்டு தடவைகள் பலாத் காரத்துக்கு உட்படுத்தப்பட் டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் கூறி னர். (அ)

## இலங்கைக்கு...

கிடைத்துள்ளமை தனக்கு மகிழ்ச்சிய ளித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர் இலங்கையில் சீர்திருத்தம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை யும் பாராட்டியுள்ளார். (ஐ)

## கொழும்பில்...

இவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர் அவரை வெட்டிக் கொன்று விட்டு அங்கிருந்து தப்பியோடினர்.

குற்றுயிராகக் கிடந்தவரை மீட்ட அயலவர்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அதற் குள்ளாகவே அவர் இறந்து விட்டார் என்று அவரை பரிசோதித்த மருத்து வர்கள் தெரிவித்தனர்.

கொடுக்கல் - வாங்கல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கொலையாளிகளை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

## அஸ்வெசும...

வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன் வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்து டன், சமூக கட்டமைப்பில் ஏழ்மை நிலையில் உள்ளவர்க ளுக்கு நிவாரணம் வழங் கும் செயற்திட்டத்தை வெளிப் படை தன்மையின் முன்னெடுக்கவும், தகுதியானவர்களுக்கு மாத்திரம் நிவார ணம் வழங்கவும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

சமுர்த்தி பயனாளர்களில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் நிவா ரண தொகையை பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்கள் என தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப் பட்ட பரிசீலனைகள் ஊடாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது. தகுதியுள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டு தகுதியற்றவர்க ளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அரச நிவாரண வழங்கல் திட்டத்தை மறுசீரமைக்கும் வகையில் அஸ்வெசும நிவாரண திட்டம் அறிமுகப்படுத்தப்பட் டது. இந்த திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு விசேட ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட் டுள்ளது. அஸ்வெசும நிவாரண திட்டத் தில் குடும்ப அடிப்படையிலான பயனா ளர்களின் பெயர் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பல்வேறு தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கிறார்கள். தகுதியானவர்கள் புறக் கணிக்கப்பட்டிருந்தால் அவர்கள் பிரதேச சபை ஊடாக எதிர்வரும் 30ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்யலாம். அத்துடன், தகுதியற்ற ஒருவரின் பெயர் நிவாரண திட்ட பட்டியலில் உள்ளடக் கப்பட்டிருந்தால் பொது மக்கள் எவரும் உரிய பிரதேச சபையில் முறைப்பாடு செய்யலாம்.

குடும்ப பயனாளர்களுக்கான நிவாரண தொகை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் வழங் கப்படும்.அத்துடன் நீரழிவு நோயா ளர்கள், சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் விசேட தேவையுடையவர்கள் என்ற அடிப்படையில் தனிநபர் பயனாளர் களின் பெயர் பட்டியல் எதிர்வரும் இருவார காலப்பகுதிகளுக்குள் வெளியிடப்படும்.

அஸ்வெசும நிவாரண செயற்திட் டத்தின் இரண்டாம் கட்ட விண்ணப்பம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கோரப்படும். இந்த ஆண்டு விண்ணப்பம் செய்யாத வர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் விண் ணப்பிக்க முடியும். ஆகவே அஸ்வெசும நிவாரண செயல்திட்டம் சிறந்த முறை யில் முன்னெடுக்கபடுகிறது. ஒருதரப்பி னரின் கோரிக்கைக்கு அமைய செயல் திட்டத்தை இடைநிறுத்த முடியாது. குறைபாடுகள் காணப்படுமாயின், அதனை ஆராய்ந்து தீர்த்துக் கொள்ள முடியும் - என்றார். (ஐ)

## சர்ச்சைக்குரிய...

சேர்க்கப்பட்ட பின் சிசேரியன், கேர் னியா சத்திர சிகிச்சைகளுக்கு உட்படுத் தப்பட்ட இரண்டு பெண்கள் உயிரி ழந்தனர்.

மயக்கமடைய செய்வதற்காக வழங் கப்பட்ட இந்திய மயக்க மருந் தைப் பயன்படுத்திய பின் அவர்களுக்கு அவ் வாறான நிலைமை ஏற்பட்டதாக விசார ணைகளில் தெரிய வந்தது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## ஜே. வி. பி. கால...

அரசாங்கம் தோண்ட வேண்டும் என ஐந்து சிவில் சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மனிதபுதைகுழிகள் குறித்து கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணை கள் குறித்து முழுமையான அறிக்கையை வெளியிட்டுள்ள ஐந்து அமைப்புகளும் இலங்கை அரசாங் கம் இந்த விசாரணை களில் எவ்வாறு தலையிட்டன என்பது குறித்து முழுமையான அறிக்கையை வெளி யிட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெளிவான பார்வையில் - இலங்கையில் மனித புதைகுழியின் பின்னால் - உண்மையை தேடுதல் என்ற விவரண சித்திரமும் வெளியிடப்பட்டது - இந்த விவரண சித்திரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எவ் வாறு நீண்ட போராட்டத்தை முன்னெ டுக்கின்றனர் என்பதை விபரிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்தில் பணியாற்றிய வேளை- மாத்தளை பகுதியில் நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட் டார்கள் அவ்வேளை அவர் அந்த பகுதி யின் இராணுவ அதிகாரியாக காணப் பட்டார் பின்னர் ஜனாதிபதி ஆணைக் குழு அவரின் பெயரையும் தனது விசாரணைகளின் போது குறிப்பிட்டி ருந்தது என ஐந்து அமைப்புகளும் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளன. (ஐ)

## அரசியல்...

குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டி ருந்த தேவதாசனுக்கு 2017ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் 20 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதித்தது.

இதனைத்தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்ட தேவதாசன், தன்னை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி யிருந்தார். நீதிமன்றில் அவர் தனக்காகத் தானே வாதாடி வந்த நிலையில் வழக்குக் கான ஆதாரங்களை திரட்ட பிணையில் விடுமாறும் கோரியிருந்தார். தவிர, தனது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரத போராட் டங்களையும் நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

ரணில் விக்கிரமசிங்கவுடனான தனது சந்திப்பை தொடர்ந்து கருத்து வெளி யிட்ட கிறிஸ்ரலினா ஜோர்ஜியேவா,

"இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் முயற்சியில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் உறுதிபூண்டுள்ளது. தற்போதைய பொருளாதார சவால்களை எதிர் கொள்ள இலங்கை அரசாங்கத்தின் வலுவான முன்னெடுப்புக்களை வர வேற்கிறோம். இலங்கை மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற் கான பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் கடமைப்பட்டுள்ளது - என்றும் கூறி னார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க இந்த மாநாட்டின் பக்க அம்சமாக பல அரச தலைவர்கள் மற்றும் பல தரப்பு இராஜ தந்திர தலைவர்களை சந்தித்து பொருத்த மான விடயங்கள் குறித்து கலந்துரை யாடி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# இலங்கையின் மீட்சிக்கு ஐ. நா. ஒத்துழைக்கும்!

## ஜனாதிபதிக்கு பொது செயலர் உறுதி

கொழும்பு, ஜுன் 24

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஒத்துழைப்பு வழங் கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடை பெறுகின்ற "புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம்" தொடர்பிலான உச்சி மாநாட் டுக்கு இணையாக இடம்பெற்ற ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஐக்கிய நாடுகள சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டாரெஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு உறுதிளிக் கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற் றம், பொருளாதார மீட்சிக்கான செயற் பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார்.

நிலையான பொருளாதார கொள்கை களை நடைமுறைப்படுத்தும் போதும் நீண்ட கால பொருளாதார வேலைத்திட் டங்களை முன்னெடுக்கின்ற போதும் வலுவான நிதிக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் மேற்கொள் ளும் அர்ப்பணிப்புடனான முயற்சிகள் பற்றியும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நிலையான அபிவிருத்தி இலக்கு களை மேம்படுத்தும் அதேநேரம் கால நிலையினால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாய மார்க்க திட்டங் களை எடுத்துக்காட்டி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பரிந்துரைக்கமைய முன் னெடுக்கப்படும் "காலநிலை சுபீட்சத்துக் கான திட்டமிடல்" தொடர்பிலும் செய லாளர் நாயகத்திற்கு விளக்கமளித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பு நட வடிக்கைகள் ,கடன் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்க ளின் போது இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இடையிலான ஒத்து ழைப்புகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டதாக ஜனாதி பதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. (ஐ)

## பல்கலைக்கழக...

பிரேமதாஸ பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வட்டியில்லா கடனை மீளவும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக் கப்பெறும் மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியை தொடர்வதற்கான வட்டி யில்லா கடன் வழங்கும் திட்டம் தொடர் பாக கல்வி அமைச்சர் இந்த சபைக்கு இதற்கு முன்னர் அறிவித்திருந்தார்.

அதேநேரம் கல்வி அமைச்சரால் அமைச்சரவைக்கு இது தொடர்பில் சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத் துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது.

இதன் பிரகாரம் தற்போது இது தொடர்பான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தை விரைவாக மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

நான் கல்வி அமைச்சராக இருந்த குறுகிய காலத்தில் தனியார் பல்கலைக் கழகங்கள் பலவற்றுக்கு இந்த திட்டத் தின் கீழ் நாங்கள் பணம் வழங்கி இருந் தோம். இந்த நடவடிக்கைகளை அதிகரிப் பதற்கும் கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் நடவடிக்கை எடுத்திருந் தோம்.

எனவே, தற்போது உள்ள நிதி பிரச் னையை முகாமைத்துவம் செய்து கொண்டு, அரச பல்கலைக்கழக மாண வர்களுக்கு மாத்திரமல்லாது, தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக் கொடுக்க மிக விரைவில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம் - என்றார்.

## தலையற்ற சடலம் மன்னாரில் ஒதுங்கியது

கொழும்பு, ஜுன் 24

மன்னார் கடலில் கரை ஒதுங்கியதலை அற்ற உடலம் சீன நாட்டவருடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகின் றது.

மன்னார் பேசாலை கடற்கரையில் மனித உடல் பகுதி ஒன்று கரை ஒதுங்கி யது இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் அதனை மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலத்தில் காணப் படும் உள் ஆடை மற்றும் இதர ஆடை யின் அடிப்படையில் இந்த உடல் பகுதி சீன நாட்டவருடையதாக இருக்கலாம் என கருதப்படுகின்றது. (ஐ)

## பிரபாகரனின்...

காட்டுகிறது. இந்தத் தயக்கம் ஏதோ ஓர் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

இதேவேளை புலிகளின் முன்னாள் உறுப்பினர்களான கருணா மற்றும் தயா மாஸ்டர் ஆகியோர் மூலம் அவரின் மரணத்தை உறுதிப்படுத்தியதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

அவர்கள் பார்வையிடலாமே தவிர, மரபணு அறிக்கையை வெளியிடக்கூடிய அளவுக்கு அவர்கள் நிபுணர்கள் அல்ல. அத்துடன், அவர்களுக்கு மருத்துவ அறிவும் கிடையாது. ஆகவே, அரசாங்கம் தான் தெளிவான எண்ணத்தைக் கொண்டிருந்தால் உண்மையை வெளியிடுவது பொருத்தமானது - என்றார். (ஐ)

## சமுர்த்தி...

நடந்த கலந்து ரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமுர்த்தி பயனாளிகளிடம் கொடி வாரம், மது ஒழிப்பு வாரம் என ஒவ் வொரு வருடமும் நிதி சேகரிப்பு நட வடிக்கைகள் நடக்கின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமுர்த்தி பயனாளிகளிடம் குறித்த விடயங்களுக்காக நிதி சேகரிக்கும் போது அதனை அவர்கள் வழங்காது விட்டால் சமுர்த்தி நிறுத்தப்படும் என்ற மன உணர்வு அவர்களுக்கு ஏற்படக் கூடும். இல்லாவிட்டால் நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் நிதி தராவிட்டால் சமுர்த்தி நிறுத்தப்படும் என்ற அச்சுறுத்தல்களை விடுவதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

அத்துடன், யாழப்பாணத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் குற்றச் சாட்டு முன்வைக்கப்படுகின்ற நிலை யில் சமுர்த்திப் பயனாளிகள் தொடர் பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஆகவே, இனி வரும் காலங்களில் சமுர்த்தி பயனாளிகளிடம் சமூக மட்ட நிகழ்வுகளுக்கான நிதிகளை சேகரிக்க வேண்டாம் என அவர் மேலும் தெரி வித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜே.வி.பி. கால மனித புதைகுழி ஆவணங்களை சிதைத்து அழிக்க உத்தரவிட்டார் கோட்டாபய!

## சர்வதேச அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 24

**1989ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) கிளர்ச்சிக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது, தான் இராணுவ அதிகாரியாக செயற்பட்ட பகுதியில் கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட இரகசிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை தடுக்கும் வகையில் பொலிஸ் பதிவுகளை சிதைத்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம், இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உள்ளிட்ட செயற்பாட்டாளர் குழுக்களின் அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மூன்று தசாப்தங்களில் சுமார் 20 பாரிய புதைகுழிகளை தோண்டி எடுக்கப்பட்டதில் நூற்றுக்கணக்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு, அவர்களது உடல்களை அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான எச்சங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படாத மனித புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம்.

அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்களால் நிறுவப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்களில் எதுவுமே பாரிய புதைகுழிகள் பற்றி ஆராய கட்டளையிடப்படவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொணரும் முயற்சிகள் தடைப்பட்டன.

மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டனர். குடும்பங்களின் சட்டத்தரணிகள் அங்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. உயிருள்ள சாட்சிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. பிரேதப் பரிசோதனை தரவுகள் சேகரிக்கப்படவில்லை மற்றும் மிகவும் அரிதான நிகழ்வுகளில் ஒருவர் தண்டிக்கப்பட்டார். பின்னர் அவர்கள் மன்னிக்கப்பட்டனர்.

இது அரசியல் விருப்பமின்மையின் கதை - போதுமான சட்ட கட்டமைப்பு, ஒரு ஒத்திசைவான கொள்கையின் பற்றாக்குறை மற்றும் போதுமான ஆதாரங்கள் இல்லாதது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அது தீர்க்கப்படாத சோகத்தின் கதை. இழந்தவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்காமல் வாழவும் இறக்கவும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

மனிதப் புதைகுழிகளை தோண்டியெடுப்பதில் உள்ள தாதமதத்தில் ராஜபக்ஷவின் பங்கு அரசியல் தலையீட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

2013 ஆம் ஆண்டு மத்திய இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அப்பகுதியில் பொலிஸ் நிலையங்களில் உள்ள ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து பொலிஸ் பதிவுகளையும் அழிக்குமாறு அப்போதைய சக்தி வாய்ந்த பாதுகாப்பு அதிகாரியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

1989 ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியின்போது, ஒரு இராணுவ அதிகாரியாக கோட்டாபய ராஜபக்ஷ, இந்த பிராந்தியத்தில் பணியாற்றியிருந்தார்.

விசாரணைக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் ராஜபக்ஷ மற்றும் மூத்த காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

(அ)

# பிரான்ஸில் எலிஸே மாளிகைக்கு விஜயம் செய்த ரணில் தம்பதி!



பாரிஸ், ஜூன் 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் பிரான்ஸ் ஜனாதிபதி மாளிகையான எலிஸே மாளிகைக்கு விஜயம் செய்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அழைப்புக்கு அமைய புதிய சர்வதேச நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் கலந்துகொள்வதாக ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (அ)

# எதிர்பார்ப்பை கைவிட்ட பொதுஜன பெரமுனவினர்!

கொழும்பு, ஜூன் 24

அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அந்த எதிர்பார்ப்பை கைவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கூறப்படும் அமைச்சரவை மறுசீரமைப்பு நடைபெறுமா இல்லையா என்ற நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதால்,சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்பார்ப்பை கைவிட்டுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ, அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவேண்டிய 10 பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார்.

எனினும் பசில் வழங்கிய 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பட்டியலில் உள்ள 6 பேருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

மேலும் நான்கு பேருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்காது என பேசப்படுகிறது.

இதன் காரணமாக அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டால், ஏற்றுக்கொள்வதாகவும் இல்லை என்றால், தீர்மானம் ஒன்றை எடுக்க தயாராக இருப்பதாகவும் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

# இந்திய தூதுவரை சந்தித்தார் தினேஷ்

கொழும்பு, ஜூன் 24

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எதிர்கால ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாக பிரதமர் தினேஸ் குணவர்தன, இந்திய தூதுவர் கோபால் பாக்லேவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அலரி மாளிகையில் இருவருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார ஒத்துழைப்புகள் தொடர்பான உத்தேச செயற்பாடுகள் குறித்து பிரதமரிடம் இதன்போது இந்திய தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில், இரு நாடுகளுக்கும் இடையில் விமான போக்குவரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக இந்திய தூதுவர் கூறியுள்ளார்.

டிஜிற்றல் மயமாக்கல், மாற்று சக்திவளம், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் இந்திய முதலீடுகளை அதிகரிக்குமாறு பிரதமர் தினேஸ் குணவர்தன இதன்போது இந்திய தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவராகிறார் பேராசிரியர் மஞ்சுள

கொழும்பு, ஜூன் 24

பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் புதிய தலைவராக பேராசி ரியர் மஞ்சுள பெர்னாண்டோவை நியமிக்க அரசியலமைப்புப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடத்துக்கு பேராசிரியரின் பெயர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்டது.

இதற்கு அரசியலமைப்பு பேரவை அனுமதி அளித்துள்ளது.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுகின்றார்.

அந்த ஆணைக்குழுவின் தலைவராக இருந்த ஜனக ரத்நாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் பதவி நீக்கப்பட்டார்.



இவரை பதவி நீக்கம் செய்வதற் கான பிரேரணை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் கிடைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சி வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு யோசனை

கொழும்பு, ஜூன் 24

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்யும் யோசனை தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பான யோசனைகளை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான யோசனை பாராளுமன்ற தெரிவுக் குழுக்களினூடாக முன்வைக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர கூறினார்.

பாராளுமன்ற விசேட கட்டளைகள் சட்டமூலத்தின் ஊடாகவே உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமது பணிளை முன்னெடுத்துச் செல்வதில் வேட்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார். (அ)

# கனடா தூதரகத்துக்கு முன் சிங்கள ராவய ஆர்ப்பாட்டம்




கொழும்பு, ஜூன் 24

இலங்கை தொடர்பில் கனடா பிராமர் வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்துக்கு முன்னால் சிங்கள ராவய தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.